பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 26 ஞாயிற்றுக்கிழமை (08.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:074

# ஆஸ்பத்திரி மீது விமானக் குண்டுவீச்சு!

# 61 நோயாளர்கள் கோரப் பலி எடுப்பு!!

## இரண்டு நாள்களில் மொத்தம் 126 மக்கள் உயிரிழப்பு


சேதமடைந்த வைத்தியசாலையின் முகப்புப் பகுதி.

கொழும்பு, பெப்ரவரி 8

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையான பொன்னம்பலம் ஞாபகார்த்த ஆஸ்பத்திரி மீது, வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் "மிக்" ரக விமானங்கள் நடத்திய அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலில், அங்கு சிகிச்சை பெற்றுவந்த 61 நோயாளர்கள் கோரப் பலியானார்கள்!

அப் பகுதியில் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடத்தப்பட்ட விமானம் மற்றும் ஷெல் தாக்குதல்களில் மொத்தம் 126 பொதுமக்கள் உயிரிழந்ததாக இணையத்தளத் தகவல் தெரிவித்தது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புக்கு தெற்கே மோதல் தொடர்கின்றது: சூசை காணாமற் போனாரா என்று சந்தேகம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.8

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் புதுக் குடியிருப்புக்கு தெற்கே நேற்றும் கடும் மோதல்கள் தொடர்ந்தன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தாமரன்குளம், வீரகுளம், கோவிற் குளம் போன்ற பகுதிகளில் மோதல்கள் தொடர் கின்றன. விடுதலைப் புலிகளின் கடும் எதிர்தாக்குதல்களுக்கு மத்தியிலும் படை யினர் முன்னேற்ற நவடிக்கைகளை தொடர் கின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை -

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று ஆறு தடவைகள் விமான தாக்குதல்கள் நடத் தப்பட்டதாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதும் தடைப்படும் அபாயம்

கொழும்பு, பெப்.8

வன்னிப் பகுதிகளுக்கு ஐ.நா.உலக உணவுத் திட்டத்தின் ஏற்பாட்டில் உண வுப் பொருள்களை எடுத்துச் செல்ல முடி யாத நிலை தோன்றியுள்ளது. இதன் காரண மாக மக்கள் உணவு நெருக்கடியை எதிர் நோக்குகின்றனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று நாள் சண்டையில் பெரும் உயிரிழப்புக்கள்

சென்னை, பெப்.8

இலங்கை, முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் இம்மாதம் முதலாம் திகதியன்று நடத்திய தாக்குதலில் இராணுவத் தரப்பில் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டதாக தகவல் கள் வெளியாகியுள்ளதாக சென்னையில் இருந்து வெளிவரும் "தினமணி" நாளிதழ் தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்புக்கு அருகேயுள்ள மன் னாகண்டல், கேப்பாபுலவு முகாம்களில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி முன்னேறுவதற்கு இராணுவத்தினர் ஆய்த்த நிலையில் இருந் தனர். அப்போது அதிகாலை நேரத்தில் திடீரென்று விடுதலைப்புலிகள் அந்த முகாம்கள் மீது கடுத் தாக்குதலை நடத்தி னர். இத்தாக்குதல் பெப்ரவரி 3ஆம் திகதி வரை தொடர்ந்ததாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் இன்று திருமஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.8

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் வருடாந்தம் தைப்பூசத் தினத்தில் சிறப்புற நடை பெறும் உலக திருமஞ்சத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணி தொடக்கம் 1008 சங்காபிஷேகம்நடைபெற்று நண்பகல் வரை பூசைகள் இடம்பெறும். பின்னர் மாலையில் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று மாலை6 மணிக்கு மஞ்சத்தில் முருகன் திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சிஅளிப்பார்.(அ-1)

(சிறப்பிதழ்8 ஆம் 9 ஆம் பக்கங்களில்)

## போர் நிறுத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழகத்தில் காங்கிரஸ் வட்டாரத் தலைவர் தீக்குளித்து உயிரிழப்பு

சென்னை, பெப்.8

இலங்கையில் அப்பாவி மக்கள் கொல் லப்படுவதை தடுத்து நிறுத்த போர் நிறுத் தம் கொண்டு வர மத்திய அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைத்து தமிழகத்தில் மற்று மொருவர் தீக்குளித்து உயிர் நீத்தார்.

நாகபட்டின மாவட்டம், சீர்காழி காளியம் மன் கோயில் வீதியைச் சேர்ந்த ரவிச்சந் திரன் (வயது-45) என்பவரே தீக்குளித்து உயிரிழந்தார். இவர் மத்திய அரசில் ஆட்சியில் உள்ள காங் கிரஸ் கட்சியின் சீர்காழி வட் டாரத் தலைவர் ஆவார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் ஈழத்தமிழ ருக்கு ஆதரவாக முழக்க மிட்ட படி உடலில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சேதமுற்ற புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி புதுமாத்தளன் சனசமூக நிலையத்துக்கு மாற்றம்

கொழும்பு, பெப்.8

ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் பெரிதும் சேத மடைந்த புதுக்குடியிருப்பு வைத்தியசாலை, தொடர்ந்து புதுமாத்தளன் பகுதியில் உள்ள (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரைப் பாதுகாக்கக் கோரி நேற்று தமிழகம் எங்கும் கறுப்புக்கொடிப் பேரணி

சென்னை, பெப்.8

ஈழத்தமிழர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் - தமிழினப்படுகொலை நடத்திவரும் மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்தும் -

தமிழ்நாடு முழுவதும் நேற்று கறுப்புக்கொடிப் பேரணி கள் நடத்தப்பட்டன.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஏற்பாட் டில் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை உட்பட மாவட்ட தலைநகரங்களிலும்அனைத்து நகரங்களிலும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இலங்கையில், சிங்கள அரசின் கொலை வெறிபோர்ப் படைத் தாக்குதலுக்கு ஆளாகி (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்க அனைத்துக்கட்சிக் குழு சிபார்சு

கொழும்பு, பெப்.8

* அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டும்.
* மாகாண மட்டத்தில் மேல் (20 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை ஞாயிறு ஆராதனை

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்
(ஸ்தாபகம் 1848)
மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்
(ஸ்தாபகம் 1898)

அமெரிக்க மிஷனரிமார்கள் ஸ்தாபித்த இவ்வைத்திய சாலைகளின் அநேக வருடங்களாக ஆற்றிவரும் அளப்பரிய மருத்துவ சேவைகளை பாராட்டும் வண்ணம் இன்று (08.02.2009) ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் தென்னிந்திய திருச்சபையின் தேவாலயத்தில் வைத்தியசாலை ஞாயிறு வழிபாடு நடைபெறும்.

இவ் வழிபாட்டைத் தொடர்ந்து இணுவில் மக்லியோட் வைத்தி யசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சிறு சத்திர சிகிச்சை நிலையம் (Minor Operating Theatre) தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயத்தின் பேராயர் அதி வணக்கத்துக்குரிய DR.டானியேல் S.தியாகராஜா, Ph.D.அவர்களால் திறந்து வைத்து, அர்ப்பணம் செய்யப்படும்.

நண்பர்கள் யாவரும் வருகை தந்து இவ்வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

வைத்திய மேலதிகாரி
Medical
Superintendent.


# வல்வெட்டித்துறையில் இலங்கை வங்கி விரிவாக்கற்கிளை அங்குரார்ப்பணம்

வடமராட்சி,பெப்.8

இலங்கை வங்கி, வல்வெட்டித் துறை விரிவாக்கற்கிளையின் அங்குரார்ப்பண விழா வல்வெட்டித்துறையில் விஷ்ணு சுந்தரம் கட்டடத்தில் இன்று 8 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணிக்கு, இலங்கை வங்கியின் யாழ்.அதி மேற்றரக் கிளை பிரதான முகாமையாளர் கே.பி.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை சிவன்கோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள், முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர், நெடியகாட்டுப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.நந்தகோ பாலக்குருக்கள், பங்குத்தந்தை அருட்திரு ம.பத்திநாதர் அடிகளார் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர்.

பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் கலந்து கொள்கிறார்.

(203-236-70)








பாரம்பரிய வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட
எவரெஸ்ட் பிருங்காமலத் தைலம்

கண் எரிச்சல், தேக எரிவு, கண்நோ, நீடித்த கால தலைவலி நீங்கும்.

- உயர் இரத்த அழுத்தம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணி.
- ஆயுர்வேத திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு பதிவுக்குட்படுத்தப்பட்டது.

எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்
உசன், மிருசுவில்.


# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம்.பாக்கியம் (பாக்கம்மா)



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பாக்கியம் (பாக்கம்மா) நேற்று (07.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் சிவநேசகாந்தன் (லண்டன்), குலனேசசேகரன் (சுவிஸ்), நேசபாஸ்கரன் (கனடா), புவனறஞ்சினி (லண்டன்), அஞ்சலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயேஸ்வரி (லண்டன்), செல்வதேவி (சுவிஸ்), ஜெயமதி (கனடா), மோகேந்திரம் (லண்டன்), யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிசானி, யனுசன், பிரியங்கா, பிரியந், ஜிவேதா, சகிரா, கெசாந், சர்வதன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), பானுஜா (மாணவி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் அரசரத்தினம், நேசமணி, காலஞ்சென்றவர்களான செல்லையா, ஏரம்பு ஆகியோரின் மைத்துனியும் மல்லிகாதேவியின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோவில் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

தகவல்:
அஞ்சலாதேவி (மகள்).

## சின்னத்தம்பி ஞானமூர்த்தி

(முன்னாள் அலுவலர், பெருந்தெருக்கள் திணைக்களம், உதவி ஆசிரியர், வீரகேசரி)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமூர்த்தி நேற்று (07.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் க.சின்னத்தம்பி மற்றும் ஞானபூசணம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் கணேசமூர்த்தி (உபஅதிபர், யா/கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலயம்), கருணாமூர்த்தி (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை), புவனேசமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச்சபை), ஜெயபாலமூர்த்தி (பிரதிப்பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களம், கொழும்புத் தலைமையகம்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), சிவமூர்த்தி (ஆசிரியர், யா/விவேகானந்தா வித்தியாசாலை, மானிப்பாய்), தேவகுமாரி, யோகேஸ்வரி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), ஞானகௌரி (ஆசிரியை, கோகுலம் அறநெறிப் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ந.குலேந்திரராசா (முன்னாள் உத்தியோகத்தர், வடிசாலைகள் திணைக்களம்), ப.சிவலோகநாதன் (உப அதிபர், சித்தங்கேணி பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை), க.ஆனந்தராணி, வைத்திய கலாநிதி க.இராஜேஸ்வரி (யாழ்.போதனா வைத்தியசாலை), பு.யமுனா (இலிகிதர், பனை அபிவிருத்தி சபை, யாழ்ப்பாணம்), ச.விக்கினேஸ்வரி (பிரான்ஸ்), சி.லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆதித்தியா, ஆதிரன், சனாதனி, யோதினி, மைதிலி, சாலினி, பிரணவன், சிந்து, கீதன், தெய்வீகன், ரிசிகேசன், திவ்வியன் ஆகியோரின் பெரியதந்தையும் தர்சிகாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஞானபதி",
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
சி.கணேசமூர்த்தி.


உ
சிவமயம்
சுன்னாகம் - மயிலணி -
திருக்குடவாயில்
ஸ்ரீ விஸ்வநாத சுவாமி
கோயில்

ஆதீன கர்த்தரும் பிரதம குருவுமாக விளங்கிய
அமரர் சிவஸ்ரீ.சோ.சோமாஸ்கந்தக் குருக்கள்

அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பெறும்
ஆபஸ்தம்ப சிரார்த்தப் பிரயோகம்

நூல் அறிமுக விழா

காலம்: தை மாதம் 27 ஆம் நாள்
நாளை (09.02.2009) திங்கட்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: மயிலணி சிவன் ஆலய மண்டபம்.

அந்தணப் பெருமக்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

குடவாயிற்கோட்டம்,
மயிலணி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.



### விற்பனைக்கு

P4 கணனி விற்பனைக்குண்டு
தொடர்புக்கு:
0719429844

### விற்பனைக்கு

L.G இரட்டைக்கதவு குளிர்சாதனப் பெட்டி. [fridge] SISIL - R 80 குளிர்சாதனப் பெட்டி என்பன உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: இல.25, லரேசன் வீதி, கோக்குவில்.

### கார்விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள தனிப்பாவனையில் உள்ள டீஸல் கார் உடன் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் 08.02.2009 ஞாயிறு மட்டும் 8-7 pm or கிழமைநாள்கள் 5 pm பின்

தொடர்பு: இல. 060 221 8552

### ஐங்கரன் திருமண சேவை

எம்மிடம் அமெரிக்கா Citizen 36 வயது, UK Citizen 40,35, 31 வயது, கனடா Citizen 37, 35 வயது, சுவிஸ் Citizen 38, 32 வயது, கொலன்ட் Citizen 27 வயது, ஜேர்மன் Citizen 43 வயது மணமகன்மார் உள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர். கல்வித் தரா தரமுள்ள மணமக்களை எதிர்பார்க்கின்றனர்.

24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு: 00447535384166, 00447508295863

Fax No. 00442086810707
00442086720673


### தவறிவிட்டது

அச்சுவேலி தெ[illegible]கு, அச்சுவேலியைச் சேர்ந்த க.சந்திரகுமார் என்பவருடைய 41ஸ்ரீ 2732 இலக்க பாரவூ[illegible] HH 5584 இலக்க மோட்டார் சைக்கிள் என்பவற்றின் சகல ஆவணங்களும் அச்சுவேலிக்கும் வடலியடைப்புக்கும் இடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் இல. 18, நவீன சந்தை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது 021 222 [illegible] இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராசரத்தினம்



சங்குவேலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் (வெள்ளை ஐயா - ஓய்வு பெற்ற விவசாயத்திணைக்கள அலுவலர்) 05.02.2009 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் திருகோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வடிவேல் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, மயில்வாகனம், பூபாலசிங்கம், பொற்கொடி ஆகியோரின் சகோதரனும் கருணைராஜ் (கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், திருகோணமலை), வசந்தி (கனடா), சுமந்தி (கனடா), கண்ணன் (கொலன்ட்), இராஜசோழன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராஜ பாண்டியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகன் (கனடா), பிறேமச்சந்திரன் (கனடா), வதனா (கொலன்ட்), காந்திமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தவை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

74/1, சந்நமாதா கோவில் முன் ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஜீவநாயகி விஸ்வநாதன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜீவநாயகி விஸ்வநாதன் 06.02.2009 வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையா சொர்ணம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி துரையப்பா முத்தாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், நடுத்தெரு, காரைநகரைச் சேர்ந்த துரையப்பா விஸ்வநாதனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, அவுஸ்திரேலியா) அன்பு மனைவியும், சியர்மளா (அவுஸ்திரேலியா), பிரியங்கா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.புண்ணியமூர்த்தி, சிவகுமாரன் (கணக்காளர்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2009) திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அவுஸ்திரேலியா,
தொ.பே: 029 7466157

தகவல்:
கந்தையாப்பிள்ளை
ரமணன் (பேரன்)

## சண்முகராசா இலங்கைநாதன்

(அன்னராசா - உரிமையாளர், அன்னராசா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா இலங்கைநாதன் 06.02.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - அன்னமுத்து தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - விசாலாட்சி தம்பதியினரின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சசீதர் (அன்னராசா ஸ்ரோர்ஸ்), சசிகலா, சசிலதா, சசிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்ரா (கல்வியற் கல்லூரி), குமணன் (ஆசிரியர், யாழ்/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் சிவகுருநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), உலகநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், லண்டன்), நல்லநாதன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இளங்கோவன் (விவாகப் பதிவாளர், தீவுப்பகுதி), மனோகரி (அவுஸ்திரேலியா), தனலட்சுமி (லண்டன்), சித்ராதேவி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

639/1, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
சசீதர் (மகன்),
இளங்கோவன் (மைத்துனர்),
குமணன் (மருமகன்).

# குடாநாட்டு மக்களின் வாழ்வியலைவளப்படுத்த தொண்டு நிறுவனங்கள் செய்ய வேண்டியவை பல!

குடாநாட்டின் வாழ்வியலைத் தீர்மானிக்கின்ற சக்திகளாகத் தொண்டு நிறுவனங்கள் தம்மை நிலை நிறுத்திக் கொண்டுள்ளன என்பது இங்கு வாழ்கின்ற அனைவருக்குமே உள்ளங்கை நெல்லிக்



கனியான விடயமாகும்.

'மக்கள் சேவை' என்ற மகுட முழக்கங்களோடு, வெவ்வேறான அபிவிருத்தித் திட்டங்களுக்குமான செயற்றிட்டங்களோடு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல்கிப் பெருகத் தொடங்கியுள்ளன. மூலைக்கு மூலை முளைத்தெழும் தனியார் கல்வி நிலையங்களைப் போன்று வீதிகளெங்கும் தொண்டு நிறுவனங்களின் அலுவலங்கள் புதிது புதிதாகத் திறக்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக நல்லூர் கோயில் வீதியை ஒட்டி, குறிப்பிட்ட ஒரு வீதியின் பெயர் மறைந்து தொண்டு நிறுவன வீதி எனக் கூறுமளவுக்கு ஏராளமான சர்வதேச, உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் தமது பதிவிடங்களை அமைத்துக் கொண்டுள்ளன.

வாழ்வாதார அபிவிருத்தி, அனர்த்த உதவி, சுயதொழில் மேம்பாடு, சுகாதாரம், கல்வி, பெண் அபிவிருத்தி, முரண் தீர்க்கும் தொடர்பாடல், சிறுவர் நலன், உளநல மேம்பாடு எனப் பலதரப்பட்ட அபிவிருத்தி நோக்கங்களை மையமாகக் கொண்டதாகவே தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதில் குறிப்பிடக்கூடிய இன்னொரு விடயம் என்னவெனில், ஒவ்



வொரு அபிவிருத்தித் திட்டத்துக்குமெனத் தனித் தனியாக ஒவ்வொரு தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டு வரும் ஆக்கபூர்வ நிலை.

உத்தியோக பூர்வமான பதிவுகளின் படி 35 உள்ளூர் தனியார் தொண்டு நிறுவனங்களும், 20சர்வதேசத் தொண்டு நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் தனியான ஒரு இலக்கினை நிறைவேற்றுவதற்காகவே செயற்பட்டு வருகின்றன. உதாரணமாக சிறுவர் நலன் என்ற விடயத்தை மட்டுமே பிரதானப்படுத்தி சில தொண்டு நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. அது போலவே கல்வி, சுகாதாரம் போன்ற ஏனைய குறிக்கோள்களை முன்வைத்து இன்னும் சில தொண்டு நிறுவனங்கள் நகர்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அல்லது தொண்டு நிறுவனங்களின் உதவி தேவைப்படுவோர் என இனங்காணப்பட்டவர்களுக்கு நிறுவனங்கள் மூலம் பெறுமதியான பொருள்கள் வழங்கப்படுகின்றன. தொழிற்பயிற்சிகளை இலவசமாகவோ, அல்லது குறைந்த கட்டணத்திலோ பெற்றுக்கொள்ள முடிகின்றது. யுத்தம், சுனாமி, நிஷா போன்ற எதிர்பாராத அனர்த்தங்களில் சிக்குண்டவர்களுக்கு உடனடியாகத் தேவையான வாழ்வாதார உதவிகள் கிடைக்கின்றன. இவையெல்லாம் தொண்டு நிறுவனங்களின் தொழிற்பாடுகள் மூலமாக நமது சமூகம் பெற்றுக் கொள்ளும் நற்பலன் எனக் கொள்ளலாம். இவையெல்லாம் புறக்காட்சிக்கு- வெளித்தோற்றத்திற்கு- தெரிகின்ற நன்மைகள். இவை தவிரத் தொலை நோக்குத்தன்மை கொண்ட, உடனடிப் பயனைக் கருதாது மெல்ல மெல்ல மேலெழக் கூடிய பல நன்மைகளும் விளையவே செய்திருக்கின்றன; செய்கின்றன.

பண்பாடு, கலாசாரம் என்னும் சில காரணிகளாலும், போதிய புரிதல் இல்லாமையாலும் நாம் பேச மறந்த, அல்லது பேசாமல் மறைத்த- பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகளைத் தொண்டு நிறுவனங்கள்தான் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. உளநலன் சார்ந்த பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல்சார் பிரச்சினைகள் போன்ற புதையுண்டு போன பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்ததில் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை எவருமே மறுக்க முடியாது. இது தவிர சமூகக் கருத்தியலிலும் ஒரு மௌனப் புரட்சியை இவை ஏற்படுத்தி வருகின்றன. முன்னைய காலங்களிலெல்லாம் ஏதாவது ஒரு பிரச்சினையில் சிக்கிப் பலரும் தத்தமது பிரச்சினைகளைத் தமக்குள்ளேயே இறுகப் பூட்டி வைத்திருந்தனர். எனினும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட பல்வேறு பயிற்சிப்பட்டறைகள், கருத்துப் பகிர்வுகள் என்பவை காரணமாகப் பெரும்பாலானோர் தமது பிரச்சினைகளைத் துணிந்து வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். இவையெல்லாம் எமது சமூகம் ஆரோக்கியமான பாதையில் பயணிக்கத் தொடங்கி இருப் பதற்கான குறிகாட்டிகள் எனவும் கொள்ளலாம். இவற்றுக் கெல்லாம் ஆதாரமாக விளங்குபவை தன்னார்வமிக்க சேவை அமைப்புக்கள்தான்.

இவ்வாறாகமேலெழுந்த ரீதியாகவும், உள்ளார்ந்த வகையிலும் பல்வேறுபட்ட நன்மைகளை நம் சமூகத்தினரிடையே பரவவிட்டுள்ள இந்தத் தொண்டு நிறுவனங்கள் மீது புற்றீசல்கள் போல ஏராளமான எதிர்மறை விமர்சனங்களும் மக்கள் மத்தியிலிருந்து முன்வைக்கப்படுகின்றன.

யாழ்.குடாநாட்டில் இன்னல்களால் அவதியுறும் மக்களின் துயரங்களை அறியும் முயற்சியில் நாம் இறங்கிய போது ஏராளமான பொதுமக்கள் நேரடியாகவே குறிப்பிட்ட சில தொண்டு நிறுவனங்களின் பெயர்களைச் சொல்லியே குற்றங்களைச் சுமத்தியிருந்தனர். அவற்றை எமது வாசகர்கள் ஏலவே படித்திருந்தாலும் கூட அவசியம் கருதி அவற்றிற் சில மீளவும் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

★ "....சுனாமி வந்து நான்கு வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொண்டு நிறுவனம் எமக்கு வாக்குறுதியளித்தபடி எமது வீடுகளைக் கட்டி முடிக்கவில்லை. இன்னமும் எமது வீடுகள் வசிக்க முடியாத நிலையில், அரைகுறையாகவே உள்ளன".

-தும்பளை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பெண்மணி.

★ "....எமது கடற்றொழிலாளர் சங்கத்துக்கென வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளை எமது சங்கத்தின் பெயரில் பதிவை மாற்றித் தரும்படி கேட்டோம். அதற்குச் சம்மதித்து மோட்டார் சைக்கிளையும், எமது அதே நிறுவனத்தால் வழங்கப்பட்ட கணனியையும் பொறுப்பேற்ற தொண்டு நிறுவனமொன்று இதுவரை அதனை எம்மிடம் மீள ஒப்படைக்கவில்லை".

- தும்பளை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்.


★ "நிஷா" புயல் அடித்து அதன் சுவடுகள் கூட மறைந்து விட்டன. ஆனால் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட எங்களுக்கு உரிய உதவிகள் கிடைக்கவில்லை.

- 'நிஷா' புயலால் பாதிக்கப்பட்டவர்கள், (காக்கை தீவு).

★" மலசலகூட வசதிகள், நீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமற்ற எங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எந்தவொரு நிறுவனமும் எம்முடைய பகுதிக்கு வரவேயில்லை"

- வசந்தபுரம் பகுதி மக்கள்.

இவையெல்லாம் - ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்று- ஒரு சில உதாரணங்கள் மட்டுமே. இச் சம்பவங்கள் மூலம் ஒரு சில தொண்டு நிறுவனங்களின் -மக்கள் நலன் மீதான- அசமந்தப் போக்கு மிகநன்றாகவே புலப்படுகின்றது. தமக்குரிய வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமென்ற நோக்கோடும் அதிகளவான நிதியுதவி கிடைக்கும் என்ற காரணத்தாலும் பரவலாகப் பல அபிவிருத்தி வேலைகளைத் தொண்டு நிறுவனங்கள் பொறுப்பெடுத்துக் கொள்கின்றன. எனினும் தொலை நோக்கோடு கூடிய திட்டமிடல்கள் இல்லாத காரணத்தால் இழுத்தடிப்புகளும், அரைகுறையோடு செயற்றிட்டங்களைக் கைவிடுதல்களும் நிகழ்கின்றன.



உதாரணமாக சுனாமி வீடமைப்புத் திட்டத்தைப் பொறுப்பெடுத்துக் கொண்ட சில தொண்டு நிறுவனங்கள் ஒரு வீட்டைக் கட்டி முடிப்பதற்கான நிதி மதிப்பீட்டினை மேற்கொண்ட போது, அதற்கான கால அளவையும் இலங்கைப் பொருளாதார யதார்த்தத்தையும் பெரிதாகக் கணக்கில் கொள்ளவில்லையென்றே எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் மதிப்பீட்டினை மேற்கொண்ட பொழுது உள்ள விலைகளின் அடிப்படையிலேயே கட்டடப் பொருள்களுக்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. எனினும் கிடுகிடுவென உயர்ந்த விலைவாசியால் இப்போது கட்டடப் பொருள்களின் விலைகள் பன்மடங்கு பெருகி விட்டன. இதனால் உரிய நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு வீடுகளைக் கட்டிமுடிக்காமல் விழிபிதுங்குகின்றன தொண்டு நிறுவனங்கள். இதற்குரிய முழுப்பொறுப்பும் தொண்டு நிறுவனங்களைச் சாராது எனினும், யுத்தம், விலைவாசி போன்றவற்றின் மீது பழியைப் போட்டு

**ஓவியன்**

விடுவது மட்டும் பரிகாரமாகாது.

தினமும் ஊடகங்கள் மூலமும், தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகள் மூலமும் அவற்றின் சேவைகள் விலாவாரியாக விளக்கப்பட்டு வருகின்றன. "அவருக்கு அந்த நிறுவனம் அதை வழங்கியது. இவருக்கு இந்த நிறுவனம் இந்தப் பயிற்சியை வழங்கியது" என்பது போன்ற படங்களும், செய்திகளும் தொடர்ந்து வந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால் நிஷாவினால் பாதிப்புற்ற இடங்கள் பலவற்றுக்கும், மற்றும் வாழ்க்கைத்தரம் மிகவும் பின்தங்கிய பகுதிகளுக்கும் நாம் சென்ற போது பொதுமக்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமான குரலில் 'தொண்டு நிறுவனங்கள் எங்களுக்கு உதவும் நாட்டம் கொள்ளவில்லை' என குற்றம் சாட்டினர். ஆக இந்தத் தொண்டு நிறுவனங்களின் உதவி உண்மையாகவே தேவைப்படுகின்ற மக்களுக்கு அவை சேவை யாற்றவில்லையெனில் வேறு யாருக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றன என்ற கேள்வி இயல்பாகவே எழ இடமுண்டு. அதேவேளை ஏறக்குறைய 50இற்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் குடாநாட்டில் இருந்தும்கூட அவற்றில் சிலவற்றின் நிழல் கூட பாதிக்கப்பட்ட மக்களின் மீது விழவில்லை என்ற முறைப்பாடுகளும் உண்டு.

தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டோருக்கு உரிய வேளையில் கிடைப்பதில்லை என்பது ஒரு பிரச்சினையாக இருக்க, இன்னொரு புறத்தில் தொண்டு நிறுவனங்களின் மிகை உதவிகளால் 'தங்கி வாழும் சமூகக் குழுமம்' ஒன்றும் குடாநாட்டில் உருவாகி வருவதனையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். இதனை யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள 2008ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு அறிக்கையும் உறுதிப்படுத்தியுள்ளது. எதற்கெடுத்தாலும் தொண்டு நிறுவனங்கள் உதவிசெய்யும் என்றும், அவ்வாறான உதவிகளை அவை செய்தே ஆகவேண்டும் என்றும் மக்களிடையே ஒரு கருத்துநிலை தோற்றம் பெற்றுள்ளது. இதனால் சுயமாகத் தொழில் செய்து, தமது சொந்தக் காலில் நிற்கும் திறனை மறந்து தொண்டு நிறுவனங்களின் உதவிகளை மட்டுமே நம்பியிருக்கின்ற 'நிரந்த சோம்பேறிகளாக' மக்கள் மாறக் கூடிய அபாயமும் உண்டு. இந்நிலையை மாற்ற வெறுமனே இரவலர்களாக மட்டுமே தொழிற்படுகின்ற தொண்டு நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளைச் சரிவர மாற்றியமைத்து சமூக வலுவூட்டாளர்களாகத் தொழிற்பட முனையவேண்டும். அதன் மூலம் சமூகத்தின் வாழ்வியல் நிலையை மேம்படுத்துவதோடு, தங்கி வாழும் தன்மையையும் தவிர்க்கலாம்.

## இரவலர்களாக நில்லாமல் வலுவூட்டாளர்களாக தொண்டு நிறுவனங்கள் மாற வேண்டும்


தொண்டு நிறுவனங்கள் நாளும் பொழுதும் பெருகி வருகின்றனவே தவிர, அந்த நிறுவனங்கள் எந்தெந்தப் பிரச்சினைகளை இல்லாதொழிக்கப் போராடுவதாகக் கூறுகின்றனவோ அவற்றில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டதாக நற்பெயரில்லை. இப்போதும் குழந்தைத் தொழிலாளர்கள் பெருகியே வருகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைகளும், அதிகரித்தபடியேயுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரமும் அதல பாதளத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவென, ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒன்றிற்கும் மேற்பட்ட நிறுவனங் கள் தீர்வு காணச் செயற்பட்டும் கூட அவை ஓய்வதாகத் தெரியவில்லை. மாறாக அவை அதிகரித்தபடியே உள்ளன. ஆகவே, நிறுவனங்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் ஏதோ ஒரு தவறு இருக்கின்றது.

கோழிப்புரியாணியும், ஐஸ்கிறீமும் தவறாமல் இடம்பிடித்திருக்கின்ற பயிற்சிப் பட்டறைகளுக்கும், பக்கம் பக்கமான செயற்திட்ட அறிக்கைகளுக்கும் செலவிடும் பணத்தையும் உழைப்பையும் மக்களின் வசதிக்காக- நலனுக்காக- செலவிட்டால் அது மக்களுக்கு நன்மையைத் தரும் என்ற கருத்தும் பொதுவாக நிலவுகின்றது. குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு சாரார் இதனைக் குறையாகக் கூறி வருகின்றனர். மக்கள் சேவையை நோக்கமாகக் கொண்டு, தன்னலமற்றுத் தொழிற்படுகின்ற தொண்டு நிறுவனங்கள் தம்மீது சுமத்தப்படுகின்ற இவ்வாறான அவதூறுகளைக் களைவதற்கு, ஆக்கபூர்வமான புதிய திட்டங்களைப் பயனுள்ள வகையிலும், பாரபட்சமின்றியும் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50ஆம் நாள் நினைவும்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



நிலையில்லா வாழ்வினிலே
நீங்காத நினைவுகளைத்
தந்துவிட்டு
நிலையான வாழ்வு தேடிச்
சென்ற நல் இதயம்

அமரர் சிவசுந்தரலிங்கம்
கெங்காதரன்

அன்னை மடியில்
07.06.1963

அரன் திருவடியில்
23.12.2008

அவர்களின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் 11.02.2009 புதன்கிழமை காலை 5.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஞாபகசக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் நாம் அழைக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருமனதுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

விக்கினேஸ்வரா்க் கல்லூரி றோட்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
060 221 3076 (ரி/557032) குடும்பத்தினர்.

# காணி விற்பனைக்குண்டு

மல்லாகத்தில் 3 பரப்பு பனைகள் உள்ள, வீடு கட்ட உகந்த காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 021 222 3147

# காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதியில், கலாமன்றத்திற்கு முன்ஒழுங்கையில் நல்ல அமைப்பிலான பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 060 2211068

# இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

# மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவகுலம், 31 வயது, திருவாதிரை நட்சத்திரம், Supervisor ஆக இருக்கும் U.K Citizen, அழகான மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை. 8இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்று கிரகபாவம் 68 இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) Profile Number -4981 T.P.2523127, 2520619

யாழ்.கௌரவகுலம், 35 வயது, மூலநட்சத்திரம், ASSOCIATE DEGREE செய்துள்ள USA citizen, அழகான, சிவத்த, Vegetarian மாப்பிள்ளைக்கு அழகான படித்த Vegetarian, English பேசக்கூடிய பெண் தேவை. இது ஒரு திருமணசேவை (www.thaalee.com) Profile Number -424 T.P. 2523127

# நன்றி நவிலல்

01.02.2009 அன்று ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய மண்டபத்தில் நிகழ்ந்த எமது சிவாச்சாரியபிஷேக நிகழ்ச்சியை நடத்தி வைத்த தீட்சா குரு கலாநிதி சிவஸ்ரீ து-கு, ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கட்கும் அவரோடிணைந்து நடத்திய அனைத்து அந்தணப் பெருமக்கட்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்து வாழ்த்துப்பாக்கள் வழங்கியும், தொலைபேசி மூலம் வாழ்த்தியும் பலவிதமான உதவிகளையும் செய்த அடியவர்களுக்கும், உறவினர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆலய மண்டபத்தில் நிகழ்ச்சியை நடத்துவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அத்தியடி விநாயகர் தேவஸ்தானத்தினருக்கும் விளம்பர அனுசரணை செய்த E.S.P பேரம்பலம் நிறுவனத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஸ்ரீ தி.சோமநாதக்குருக்கள்
(கண்ணன் ஐயா),
குடும்பத்தினர்,
பலாலி வீதி, ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(82489)

# நான்காம் ஆண்டு நினைவுகளில்....



## அமரர் செல்லையா ரஜனிகாந்
### (சுரேன் / சங்கமன்)

பிறப்பு 22 . 11 . 1974

இறப்பு 25 . 01 . 2005

திதி: தை மாத வளர்பிறை சதுர்த்தசி (08.02.2009)

பாடித்திரிந்த பசுங்கிளியே - சுரேன்
தினம் தினம் பறந்தோடி மகிழ்விப்பாய் எம்மை,
செல்லமாய் மெல்லமாய் இனியகதை பேசி
நாம் மகிழ்ந்திருந்தோமே சுரேன்
எம்மை எல்லாம் விட்டு எங்கேயடா சென்றாய்
நீ பிரிந்தாலும் உன் நினைவுகள்
எம்மில் இருந்து உறங்கிடுமா?

குடும்பத்தினர்.
4/2, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
(82486)

# யா/இணுவில் மத்திய கல்லூரி

## இல்ல மெய்வல்லுநர் போட்டி (ஆரம்பப்பிரிவு) - 2009

| | |
|---|---|
| தலைவர் | : திரு.அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்) |
| காலம் | : 09.02.2009 திங்கட்கிழமை பி.ப. 1.30 மணி |
| இடம் | : கல்லூரி மைதானம் (கந்தசுவாமி கோயிலடி) |
| பிரதம விருந்தினர் | : திருமதி T. தயாபரராசா (ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்) |
| சிறப்பு விருந்தினர்கள் | : திருமதி ஸ்ரீமதி ஆனந்தமனோகரன் (பழைய மாணவி, இணுவில் மத்திய கல்லூரி) |
| | திரு.செ.ஞானசபேசன் (கிராமசேவையாளர், இணுவில் கிழக்கு -J/189) |
| கௌரவ விருந்தினர்கள் | : திரு.இ.வை.கனகநாயகம் (ஓய்வுபெற்ற உப அதிபர்) |
| | திரு.சி.சிவனேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) |

## இல்ல மெய்வல்லுநர் போட்டி (மேற்பிரிவு) - 2009

| | |
|---|---|
| தலைவர் | : திரு.அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்) |
| காலம் | : 11.02.2009 புதன்கிழமை பி.ப.1.30 மணி |
| இடம் | : கல்லூரி மைதானம் (கந்தசுவாமி கோயிலடி) |
| பிரதம விருந்தினர் | : திரு.மு.நடராசா (உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), வலிகாமம் கல்வி வலயம்) |
| சிறப்பு விருந்தினர்கள் | : திரு.க.ரவீந்திரன் (கிராமசேவையாளர், இணுவில் மேற்கு - J/191) |
| | திருமதி லலிதாவதி சுந்தரலிங்கம் (சமுர்த்தி உத்தியோகத்தர்) |
| | திருமதி சி.சிவசோதி (சமுர்த்தி உத்தியோகத்தர்) |
| கௌரவ விருந்தினர் | : திரு.கு.ரகுநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# நன்றி நவிலல்

தோற்றம் 20.03.1917

மறைவு 08.01.2009



திருமதி வல்லிபுரம் மாணிக்கம்
(சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

மாதர் குல மாணிக்கமே, அம்மா! எம்மைவிட்டு எங்கு? சென்றாய்!
கனவினிலும் எண்ணவில்லை, சடுதியாக மறைந்துவிட்டாய்!
உணர்வோடு கலந்து நம், உயிரோடு கலந்திருந்தாய்!
புன்முறுவலுடன் பொறுமை தந்து பண்புதனை எமக்களித்தாய்!
அகிலமே எமக்காக வழிகள் பல சமைத்திருந்தாய்!
தள்ளாத வயதினிலும் தளர்வினை நீ மறந்திருந்தாய்!
வணங்குகின்றோம்; உன் ஆசிவேண்டி இனிவரும் நாட்களெல்லாம்!
நின் ஆத்மா அமைதி கொள்ள இறைஞ்சுகின்றோம்! இறைவனிடம்!!

எமது தாயாரின் இறுதிக் கிரியைகளிலும், இதரகிரியைகளிலும் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு கொண்டவர்களுக்கும், உதவிகள் புரிந்தோர்க்கும், அயலவர்கள், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் அன்பு பகிர்ந்தவர்கட்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலிக்கும்!!

கணவர்: அமரர் அப்பாக்குட்டி வல்லிபுரம்.

மக்கள்: புனிதவதி, இராசதுரை [SEASONS] யோகநாதன். EDU.OFFICE [KILINOCHCHI] தேவராஜா, இராசரத்தினம் [BALAN].

மருமக்கள்: த.தம்பிஐயா, சுதந்திரதேவி, றஞ்சனா, [TEACHER KILINOCHCHI], நிர்மலாதேவி, ஜெயஸ்ரீ.


பேரப்பிள்ளைகள்: வாசுகி, வைகுந்தவாசன், வசந்தி BA. [TEACHER. VAVUNIYA] . வசந்தன், வாகீசன், திலீபன் [B.COM TEACHER. MANNAR] . அபிராமி FAC.OF. AGRI. [CAMP. JAFFNA] தாரணி [CO.OF.EDU.VAVINIYA] தீபனா .HELTH. DEPT [TRINCOMALEE], லதாங்கி, ஆரணி, பிரசாந், தீபிகா.

பூட்டப்பிள்ளைகள்: குருபரன் BSC.IND. யாழினி, ஓவியா, இலக்கியா, அக்சயா, ஆருசன்

தகவல்:அமரர் அப்பாக்குட்டி வல்லிபுரம் குடும்பத்தினர்,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணதனில் 24 11 1942



விண்ணதனில் 01 02 2007

## அமரர் கந்தையா செல்வராசா

திதி: (08.02.2009)

குடும்பத்தின் முதுகெலும்பாய் குன்றளவு ஒளி விளக்காய்
இடும்பைகள் எதிர்த்து நின்று இதமாக வாழ்ந்திருந்தாய்
ஈழத்து சிதம்பரத்தின் ஈரமது உந்தனுள்ளே
வாழத்தான் வந்தமையால் வாழ்வினிலே செழுமை பெற்றாய்
எம்மோடு நீர் வாழ்ந்த எழில் நிறைந்த நல்வாழ்வு
எப்போது இனி வருமோ ஏங்குதையா இதயமெல்லாம்
ஈராண்டு நீ மறைந்து ஈரவிழிகள் காயவில்லை
போராடி தவிக்குதையா போன உந்தன் உறவினுக்காய்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.60, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
சிவன்கோயில் வீதி,
காரைநகர்.
(82463)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுமினியின் மதிப்பு அதிகரிப்பு



ஐ.பி.எல் போட்டிகளுக்கான வீரர்கள் ஏலப்பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் டுமினியின் மதிப்பு உயர்ந்துள்ளது. ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கவுள்ள வீரர்களுக்கான ஏலம் நடைபெற உள்ளது. இதற்கான 43 வீரர்களின் பட்டியல் தயார் செய்யபப்பட்டுள்ளது. இதில் தென்னாபிரிக்க வீரர் டுமினி 4 ஆவது இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அவர் அபாரமாக விளையாடியதை அடுத்து ஐ.பி.எல். ஏலத்தில் அவருடைய மதிப்பு உயர்ந்துள் ளது. இதனிடையே ஐ.பி.எல்.போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று அந்நாட்டுக் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

# ஐ.சி.சி. டெஸ்ட் செங்கோல் தென்னாபிரிக்கா வருகை



இந்த மாத இறுதியில் அவுஸ்திரேலிய தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெறும் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரைத் தென்னாபிரிக்கா வெற்றி பெற் றால் அது ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடிப் பதற்கான ஐ.சி.சி.டெஸ்ட் செங்கோல் முத்திரை பெறும். அவுஸ்திரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறக் கடும் போட்டி நிலவிவருகிறது. இந்நிலையில் இருநாடுகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் வெற்றிபெறும் அணி முதலிடத்தைப் பெறுவதோடு அதற்காக 1,75,000 அமெரிக்க டொலர்களை வென்று உலகில் தலைசிறந்த அணி எனத் தங்களை அழைத்துக்கொள்ளத் தகுதி பெறும். தற்போது இந்தச் செங்கோல் தென்னாபிரிக்காவுக்கு வருகிறது. இந்த டெஸ்ட் போட்டிகளைக் காண தென்னாபிரிக்க ரசிகர்களின் ஆவலைத் தூண்டும் வித மாக இது தென்னாபிரிக் காவுக்கு எடுத்து வரப்படு றது. டெஸ்ட் கிரிக்கெட் ல் ஆதிக்கம் செலுத்தும் அணியைக் கௌரவிக்கும் விதமாக இந்தச் செங்கோல் முத்திரை 2001 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# இந்தியாவுக்கு எதிரான ருவென்ரி-20 அணியின் தலைவராக



இந்தியாவுடனான 'ருவென்ரி-20' போட்டிக்கான இலங்கை அணியின் தலைவராக டி.எம்.டில்ஷான் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ஒருவருட இடவேளைக்குப் பின்னர் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க அணியில் இடம்பிடித்துள்ளார்.

எனினும் 10 ஆம் திகதி இலங்கை மண்ணில் நடைபெறவுள்ள முதல் 'ருவென்ரி-20' சர்வதேசப் போட்டிக்கான இலங்கை அணியில் முன்னணி வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டதாக இலங்கை அணித் தேர்வுக்குழு அறிவித்துள்ளது. இதன்படி அணித்தலைவர் மஹேல ஜயவர்தன, உப தலைவர் குமார் சங்கக்கார, முத்தையா முரளிதரன், அஜந்த மெண்டிஸ் மற்றும் நுவன் குலசேகர ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி எதிர்வரும் காலங்களில் சிம்பாப்வே, நியூஸிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான கிரிக்கெட் தொடர்களில் விளையாடவுள்ளதாக 'ருவென்ரி-20' உலகக் கிண்ணம் மற்றும் சாம்பியன்ஸ் கிண்ண தொடர்களிலும் பங்குபெற உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே முன்னணி வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்தியாவுடனான 'ருவென்ரி-20' போட்டிக்கான அணியில் சனத் ஜயசூரிய இடம்பிடித்துள்ளதோடு உப தலைமை பதவி சாமர கபுகெதரவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இந்த அணியில் 35 வயதான இந்திக டி சேரம் இடம் பிடித்துள்ளார். கடந்த 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டு காலப் பிரிவில் இலங்கை அணிக்காக விளையாடி இந்திக்க டி சேரம் அண்மையில் கனடாவில் நடந்த 'ருவென்ரி-20' தொடருக்கான இலங்கை அணியில் இடம் கிடைக்காததால் சர்ச்சையைக் கிளப்பிய வராவார். இதன்போது அவர் விளையாட்டுத் துறை அமைச்சரிடமும் புகார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

**'ருவென்ரி-20' அணி**

திலகரத்ன டில்ஷான் (தலைவர்), சனத் ஜயசூரிய, ஜெஹறான் முபாரக், சாமர கப்புகெதர, சாமர சில்வா, இந்திக டி சேரம், லசித் மலிங்க, தில்ஹார பெர்னாண்டோ, பர்வீஸ் மஹரூப், கௌஷல்ய வீரரத்ன, மலிங்க பண்டார, ஜீவந்த குலதுங்க, தில்ஹார லொக்கு ஹெட்டிகே, மஹேல உடவத்த, திலான் துஷார.

# வேகம் காட்டுகிறார் செரீனா



அவுஸ்திரேலிய ஒபன் ரெனிஸ் போட்டியில் தங்கை வினஸ் பின்தங்க, வேகம் காட்டினார் அக்கா செரீனா.

அவுஸ்திரேலிய ஒபனுக்கு முன், 9 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதித்திருக்கும் செரீனா, வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பாகச் செயல்படுவேன் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார். முன்னதாக 2003, 2005, 2007 ஆம் ஆண்டுகளில் ஆஸி.ஒபன் பட்டத்தைக் கைப்பற்றியிருக்கிறார் செரீனா.

''நான் எனது விளையாட்டை மேலும் மேம்படுத்த முயற்சி செய்து அதில் வெற்றி பெற்றிருக்கிறேன். ஆனாலும்கூட எனது மேம்பாட்டு முயற்சி முற்றுப் பெற்றுவிடவில்லை. ரெனிஸில் நான் ''பெஸ்ட் என்ற நிலையை அடையும் வரை அது தொடரும்' என்கிறார்.

செரீனா வில்லியம்ஸுக்கு மேலாக சாதித்தவர்கள் ஸ்டெபி கிராப், மார்ட்டினா நவரத்திலோவா, கிறிஸ் எவர்ட் போன்ற ஒரு சில ஜாம்பவான் வீராங்கனைகள்தான். அவர்களுக்கு இணையாக பேசப்பட செரீனா இன்னும் சாதிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் 27 வயதாகும் செரீனாவுக்கு இன்னும் காலமும் இருக்கிறது. இன்னும் இவ்வளவு காலத்துக்கு டெனிஸ் களத்தில் இருப்பீர்கள் என்ற கேள்விக்கு நீண்டகாலம் விளையாடும் நம்பிக்கையோடு நான் இருக்கிறேன் என்றுகூறும் செரீனா ஐந்தாண்டுகளுக்கும் முன்பு இருந்ததைவிட இன்று தான் சிறந்த வீராங்கனை என்ற தெம்பு காட்டுகிறார்.

''2002 ஒரே ஆண்டில் விம்பிள்டன், பிரெஞ், அமெரிக்க ஒபன் போட்டிகளில் வென்று வியக்க வைத்தவர் இவர். ஆனாலும் ''அந்த' செரீனாவை விட'' இன்றைய' செரீனா சிறந்தவர் என்பது இவரது சுய விமர்சனம். செர்பிய வீராங்கனை செலினா ஜான்கோவிச்சுக்கு அடுத்தபடியாக 2 ஆவது இடத்திலிருக்கும் செரீனா இன்றைய இளம் வீராங்கனைகள் தங்களைப்போன்ற மூத்த வீராங்கனைகளுடன் விளையாடும்போது கடுமையான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார்கள். என் சகோதரி வீனஸும் அப்படித் தான். அவர்களைத் தோற்கடிக்க முனைப்பாகப் போராட வேண்டியிருக்கிறது. அதுவும் தனது விளையாட்டுத்தரம் உயர்வதற்கு ஒரு காரணம் என்கிறார்.

அவுஸ்திரேலிய ஒபன் போட்டிகளின்போது பேசிய செரீனா, இந்தப் போட்டிக்குத்தான் தயாரானது குறித்துத் திருப்தி தெரிவித்தார். ரெனிஸ் களத்திலும் வெளியிலும் எனது சீரான நிலை தொடர்கிறது. எப்போதும் நல்ல உடல் தகுதியோடும், தயார்நிலையிலும் இருப்பதுதான் எனது சாதனை இரகசியம்' என்று வெளிப்படையாகக் கூறுகிறார்.

''பேஸ்லைனில்' பொறிபறக்கும் ஷொட்டையும் சிறப்பான சேர்வுஸைம் தனது ஆதாரங்களாகக் கொண்ட செரீனா ஐந்தாண்டுகால இடைவெளிக்குப்பின் கடந்த ஆண்டு செம்டெம் பரில் முதலிடத்துக்கு முன்னேறி சாதனை புரிந்தார். நட்சத்திர வீரர், வீராங்கனைகளில் எவருமே இத்தனை ஆண்டுகால இடைவெளியில் முதலிடத்தைத் தொட்டு முத்திரை பதித்ததில்லை. ஆனாலும், நான்கு வாரங்களில் செரீனாவிடமிருந்து அந்த மகுடத் தைத் தட்டிப் பறித்துக் கொண்டார் ஜான்கோவிக். ஆனாலும் எக்கணமும் அந்த இடம் ஜான்கோவிக்கிடமிருந்து பறிபோகும் அபாயம் இருக்கிறது. எச்சரிக்கை மணி அடிக்கிறார் செரீனா.

# ரெனிஸ் வரலாற்றில் நீயே முதல்வன்



அவுஸ்திரேலியாவின் மெல்போண் நகரில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் சர்வதேச ரெனிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் தன்னிடம் தோற்றாலும் ரோஜர் பெடரரே சிறந்த வீரர் எனச் சம்பியன் பட்டம் வென்ற ரபேல் நடால் புகழ்ந்துள்ளார். உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த அவுஸ்திரேலிய ஓபன் சர்வதேச ரெனிஸ் போட்டியின் ஆடவர் பிரிவு இறுதிச்சுற்று ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் ரெனிஸ் அரங்கில் சிங்கமும், புலியுமாக விளங்கிவரும் சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரரும் ஸ்பெயினின் ரபேல் நடாலும் பலப் பரீட்சை நடத்தினர். இதில் 75, 36, 76,(3), 36,62 என்ற செட்கணக்கில் நடால் சம்பியன் பட்டத்தைப் போராடிக் கைப்பற்றினார்.

**பெடரர் கண்ணீர்**

ஆட்டம் முடிவடைந்த போது, வெற்றிக் களிப்புடன் வந்த நடாலுக்குக் கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்த பெடரர், பரிசளிப்பு விழாவின் போது 'கடவுளே இந்தத் தோல்வி என்னைக் கொல்கிறது' என்று நா தழுதழுக்கக் கூறி குலுங்கிக் குலுங்கி அழுதார். அவுஸ்திரேலிய ஒபன் ஆடவர் பிரிவில் 2 ஆவது இடம் பிடித்ததற்கான பரிசைப் பெற்றுக் கொண்ட பெடரர், இரசிகர்கள் முன்னிலையில் பேச முடியாமல் தவித்தார். கண்களில் கண்ணீர் வடிய துக்கம் அவரது தொண்டையை அடைத்தது. அப்போது மொத்த அரங்கமும் மயான நிசப்தத்தில் ஆழ்ந்தது.

பின்னர் ஓரளவு ஆசுவாசப்படுத்திக் கொண்ட பெடரர் சுருங்கப் பேசிவிடுகிறேன். இந்தப் பட்டத்திற்கு நடால் தகுதியானவர் என்று கூறியதுடன் நடால் நின்றிருந்த திசையை நோக்கித் திரும்பியபடி இந்தப் பட்டத்தை வெல்லத் தகுதியானவனாகி விட்டாய் நடால் என்று பாராட்டினார்.

எனினும் இந்தத் தோல்வியால் துவண்டு விடாமல் மீண்டும் விளையாடுவேன் என்று கூறிய பெடரர், [illegible] அதுதான் என் உலகம் எனக்கருதுவதா[illegible] செய்து வீட்டது [illegible] சிந்தியபடி தனது உரையை முடித் துக் கொண்டார்.

**நீயே சிறந்த வீரன்**



இதையடுத்து கிராண்ட்ஸ் லாம் கிண்ணத்தை அரங் கில் உள்ள வர்களுக்கு உயர்த்திக் காட்டிய பின்னர் நடால் பேசினார்.முத லில் இன்றைய தினம் வருத்தத் தில் உள்ள பெடர ருக்கு ஆறுதல் சொல்லிக் கொள் கிறேன். இந்தப் பட்டத்தை நான் வென்றிருந்தாலும் நீதான் சிறந்த வீரன். ரெனிஸ் வரலாற்றைப் பொறுத்தவரை நீதான் மிகச் சிறந்தவன். மிக முக்கியமான வீரனும் கூட. இன் றைய தோல்வியால் நீ எந்தளவு மன வேதனையில் உள்ளாய் என் பதைப் புரிந்து கொண்டுள்ளேன். வெற்றி பெறும் வரை போட்டியிட்டுக் கொண்டே இரு என எனது பயிற்சியாளர் கூறு வார். இந்தப் பட்டத்தை வெல்வதற்காக நிறைய உழைத் திருக்கிறேன். அவுஸ்திரேலிய ஒபனில் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் எனது கனவு நனவாகியுள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரமோடு நதியா



ஒருகாலத்தில் ரசிகர்களின் கனவுக் கன்னியாக இருந்த நதியா திருமணத்தின் பின் நடிப்பிலிருந்து ஒதுங்கியிருந்தார். எனினும் நீண்ட நாள்களுக்குப் பின்னர் எம்.குமரன் படத்தின் மூலம் மீள் பிரவேசம் செய்தார். இன்றுவரை தன் இளமை சற்றும் குறையாத தோற்றத்தில் இருக்கும் நதியாவைத் தேடி கதாநாயகி வாய்ப்புகள் வருகின்றன. எனினும் தேர்ந் தெடுத்த படங்களில் மட்டுமே நடித் துவருகிறார் நதியா. அதேவேளை நதியாவின் தீவிர ரசிகரான விக்ரமின் அன்பு வேண்டு கோளை ஏற்று அவருடன் ஒரு படத்தில் முக்கிய பாத்திரத்தில் நதியா நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.★

# பிரபுக்கு மவுசு



இளைய திலகம் பிரபு இப்போது தமிழில் முன்னணிக் குணச்சித்திர நடிகராக மாறியுள்ளார். அண்ணன், தங்கை, பொலிஸ் அதிகாரி போன்ற வேடங்களில் தோன்றி பட்டையைக் கிளப்பிவிடுகிறார் பிரபு. இதனால் இவருக்கு தமிழ் தவிர வேற்று மொழிகளிலும் மவுசு அதிகரித்துள்ளது. கன்னடப் படம் ஒன்றில் முக்கியமான பாத்திரமொன்றில் பிரபு நடிக்க இருக்கிறார். இதன் மூலம் அவர் கன்னடத்திலும் முன்னணிக் குணச்சித்திர நடிகராக உயரவும் வாய்ப்புண்டு.*




# திரை விமர்சனம்


# வெண்ணிலா கபடிக்குழு

அறிமுக இயக்குநர் சுசீந் திரனின் நெறியாள்கையில் புதுமுக நடிகர்களின் பங்கேற்பில் வெளிவந்திருக்கிறது 'வெண்ணிலா கபடிக்குழு' திரைப்படம். கபடி பற்றிய ஒரு ஆழமான பார்வையை இத் திரைப்படம் வெளிப்படுத்தியிருக்கிறது. கபடி மீது தீராக் காதல் கொண்ட இளைஞர் குழு ஒன்று எப்போதும் போட்டிகளில் தோல்வியையே சந்திக்கின்றது. இந்தக் குழு கபடிக்கான மாநில மட்டப் போட்டியில் கலந்துகொண்டு எப்படி வெற்றி பெறுகின்றது என்பதை காதலும், கவிதையும் கலந்ததாகச் சொல்லியிருக்கிறது 'வெண்ணிலா கபடிக்குழு'.

மிக மிக யதார்த்தமான தன்மையோடு படத்தின் கதை நகர்த்தப்பட்டி ருக்கிறது. இயக்குநரின் தந்தையின் உண்மைக் கதையே படத்தின் கதை என்பதாலும் இவ்வாறான யதார்த்தம் வெளிப்பட்டிருக்கலாம். முதற்படத்திலேயே கவனத்தை ஈர்க்கின்ற இயக்குநராக சுசீந்திரன் தென்படுகின்றார். இப்படத்தின் மூலம் அறிமுகமாகியுள்ள நாயகன் விஸ்ணுவும் இயல்பான நடிப்பின்மூலம் மனதில் பதிகிறார். கபடிப் பயிற்சியாளராக வருகின்ற கிஷோர் தன்னுடைய அழுத்தமான நடிப்பைப் பதிவு செய்திருக் கிறார். சரண்யாமோகனும் கிராமத்துப் பெண்ணாகவே வாழ்ந்திருக்கிறார்.

புதுமுக இசையமைப்பாளர் செல்வகணேஷின் இசையில் வந்துள்ள பாடல்களும் பார்ப் போரைப் படத்தோடு இன்னும் ஒன்றிக்க வைக்கின்றன.

'வெண்ணிலா கபடிக்குழு'வுக்கு வெற்றிகள் காத் திருக்கின்றன.★



# விவேக்குக்கு பத்மஸ்ரீ



சின்னக் கலை வாணர் என்ற பட்டத்தோடு தமிழ் சினிமாவில் உலாவரும் நகைச் சுவை நடிகர் விவேக் குக்கு இந்திய மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது கிடைத்துள்ளது. தன்னுடைய படங்களில் நகைச் சுவை ஊடாக சமூக முன்னேற்றக் கருத் துக்களையும் இவர் பரப்பி வரு வதாலேயே இவ ருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத மூட நம்பிக்கைகள், சாதி வேறுபாடு, வேலையில்லாப் பிரச்சினை போன்ற பல சமூகப் பிரச்சினைகளை நகைச்சுவை மூலம் வெளிப்படுத்திய விவேக்குக்கு விருது கிடைத்தது நியாயம்தான்.★

# மறைந்துபோன சிரிப்பு



தமிழ் சினிமா ரசிகர்களை தன் நகைச்சுவையால் கட்டிப் போட்டு வைத்திருந்தவர் நடிகர் நாகேஸ். தன்னுடைய தனித்துவமான, சிரிப் பைத் தூண்டும் உடல் மொழியாலும், மாறுபட்ட நடிப்பாலும் எல்லோரையும் மகிழ்வித்தவர். எம்.ஜி.ஆர்., சிவாஜி, கமல், ரஜனி என்று தமிழின் முன்னணி நட்சத்திரங்களோடு இணைந்து நடித்தவர். தனக்கென ஒரு தனிப் பாணியை உருவாக்கி எல்லோரையும் சிரிப்பலையில் ஆழ்த்திய நடிகர் நாகேஸ் ஜனவரி 31 அன்று உயிர் துறந்துவிட்டார். அந்த நகைச்சுவை நாயகனுக்கு 'கலைச்சுடரின்' அஞ்சலிகள்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கே.பி...?!

இலங்கையின் இனப்பிரச்சினையை ஒட்டிய யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகளை மிக நெருக்கமாகச் சுற்றிவளைத்து, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் அவர்களின் கழுத்தை இறுக்கி நெருக்குவது போல சுருக்குப் போட்டிருக்கையில் -

மறுபுறத்தில் சர்வதேசத் தொடர்பாடல் சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் செய்திருக்கின்றதாகக் கூறப்படும் ஒரு நியமனம் பலரினதும் புருவத்தையும் உயர்த்த வைத்திருக்கின்றது.

''ஏதேனும் அமைதி முயற்சிகள் இனிமேல் மேற்கொள்ளப்படுவதாயின் அதற்கான ஆரம்பத் தொடர்புப் புள்ளியாக சர்வதேச சமூகத்துடன் புலிகள் சார்பில் தொடர்புகொள்ளக்கூடியவராக செல்வராஜா பத்மநாதன் என்பவரை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நியமித்திருக்கின்றார்'' என்றும் -

''விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்புப் பிரிவு, பல்வேறு சர்வதேசத் தரப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இது குறித்து விளக்கப்பட்டுள்ளது'' என்றும் -

தெரிவிக்கும் செய்தி ஒன்றை புலிகள் சார்பு 'தமிழ்-நெற்' இணையத்தளம் கடந்த 30 ஆம் திகதி வெளியிட்டது.

ஆனால், சர்வதேசத் தொடர்புகளுக்குரிய இந்த செல்வராஜா பத்மநாதன் யார்? அவருடன் தொடர்புக் கொள்வது எப்படி? அவர் எந்த நாட்டில் இருந்து செயற்படுகின்றார்? புலிகள் அமைப்பில் அவரின் பதவிநிலை என்ன? - என்பன போன்ற எந்தக் கேள்விக்கும் மேற்படி இணையத்தளச் செய்தியில் பதில் இல்லை. அதேபோன்று அதற்குப் பின்னரும் இவ்விடயம் தொடர்பான தெளிவான தகவல் ஏதும் வெளியாகவுமில்லை.

புலிகளின் மதியுரைஞர், 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் மறைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. அதற்குப் பின்னர் 'சர்வதேசத் தொடர்பாளர்' என்ற பதவி நிலைக்குப் புலிகளால் நியமிக்கப்பட்டவர் யார் என்பதில் மர்மம் நீடிக்கும் நிலை காணப்படுவது பல தரப்பிலும் வியப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

இந்த நியமனம் குறித்துப் புலிகளின் வெளிநாட்டுத் தொடர்பகம் பல்வேறு தரப்புகளுக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருப்பதாக 'தமிழ்-நெற்' செய்தி குறிப்பிட்ட போதிலும், புலிகளின் பிரிவுகளுக்கு வெளியில் - சர்வதேச மட்டத்தில் - எந்தத் தரப்புக்கும் இத்தகைய அறிவுறுத்தல் கடிதம் கிடைத்ததாகத் தகவலே இல்லை.

இதனால் புலிகளுடன் ஏதேனும் காரணத்துக்காகத் தொடர்பாடல் வைக்க விரும்பும் பல சர்வதேச தரப்புகள் இந்த செல்வராஜா பத்மநாதன் யார் என்று தேடித் தேடிக் கேட்டுகேட்டு விசாரிப்பதைக் காணமுடிகின்றது. குறிப்பாகப் புலிகளின் தலைமையுடன் தொடர்பாடலை ள்வக்கக்கூடியவர்கள் என்று கருதப்படும் ஊடகவியலாளர்களை - உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் - பல தரப்புகள் இவ்விடயத்துக்காக பிய்த்து உதறிக் கேள்விகேட்டு நோண்டி எடுக்கின்றன. அவர்களோ பாவம். தங்களுக்கும் எதுவும் தெரியாது என்று கைவிரிக்கின்றனர்.

ஆனால், மேற்படி நியமனம் தொடர்பான 'தமிழ் - நெற்' இணையத் தளச் செய்தி வெளியாகி இரண்டொரு தினங்களில் அந்நியமனம் தொடர்பான ஓர் உண்மை மெல்லக் கசிந்திருக்கின்றது.



நீண்டகாலம் சர்வதேச மட்டத்தில் புலிகளின் ஆயுதசுவீகரிப்பு நடவடிக்கைகளில் 'வெற்றிகரமாக' செயற்பட்டு வரும் - 'கே.பி.' என்று அழைக்கப்படும் - குமரன் பத்மநாதனே இந்த 'செல்வராஜா பத்மநாதன்' என்ற தகவலே அது.

## புதிய சர்வதேசத் தொடர்பாளரை புலிகள் நியமித்ததன் பின்னணியில்...

- வி.சிவராம்-

அதனைப் புலிகளின் வட்டாரங்கள் உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதப்படுத்தாவிட்டாலும் அதுதான் உண்மை என்கின்றன விடயமறிந்த தரப்புகள்.

கே.பி. பல்மொழி வல்லுநர். ஆங்கிலம், சிங்களம், தமிழ், பிரெஞ்ச் உட்பட பல மொழிகளை சரளமாகப் பேசக் கூடியவர் என்று கூறப்படுகின்றது.

ஒரே சமயத்தில் இருபதுக்கு மேற்பட்ட - பல்வேறு நாடுகளின் - கடவுச்சீட்டுகளை, பல பெயர்களில் வைத்துக்கொண்டு, 'சர்வதேசப் போக்குவரத்தில் அநாயாசமாக ஈடுபடக்கூடிய சூரர் இவர் என்று கூறப்படுகின்றது.

புலிகளுக்காக ஆயுதங்களை சர்வதேச சந்தையில் சுவீகரித்து, கப்பல், கப்பலாக அவற்றைத் தமிழர் தாயகத்துக்கு அனுப்பும் விடயத்தில் நீண்டகாலமாக வெற்றிகரமாகச் செயற்பட்டவர் என்றும் கூறப்படுகின்றது.

2002 அமைதி நடவடிக்கைக் காலத்தின் பின்னர் புலிகளின் ஆயுதச் சுவீகரிப்பு செயற்பாட்டில் ஒதுங்கிநின்ற - அல்லது ஒதுக்கப்பட்டு நின்ற - கே.பி., தாய்லாந்து அல்லது அதையொட்டிய நாடு ஒன்றில் அந்நாட்டுப் பெண் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு அமைதியான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார் என்ற கதை அடிபட்ட பின்னணியில் -

கடந்த ஆண்டுகளில் திடீரென அவரைப் பற்றிய செய்திகள் புதிதாகக் கிளம்பின.

தாய்லாந்திலோ, இந்தோனேசியாவிலோ அந்நாட்டுப் பொலிஸாரால் கே.பி. கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்றும், அவரை இலங்கைக்கு நாடு கடத்தச் செய்து புலிகளின் ஆயுத சுவீகரிப்புக் குறித்து நோண்டி - நோண்டி - எடுக்க இலங்கை அரசு தீவிரமாக முயற்சிக்கின்றது என்றும் செய்திகள் வெளியாகின.

ஆனால், கே.பி. கைது பற்றிய செய்தி இலங்கை அரசுக்கு எட்ட முன்னரே, தாம் கைதான நாட்டின் பொலிஸாருக்கு - தமக்கேயுரிய பாணியில் - 'டிமிக்கி' கொடுத்துவிட்டு கே.பி. தப்பிவிட்டார் என்று பின்னர் கூறப்பட்டது.

புலிகளின் ஆயுதச் சுவீகரிப்பு விடயம் தொடர்பாக இந்தியாவாலும் 'இன்டர்போல்' என்ற சர்வதேச பொலிஸாராலும் தேடப்படும் முக்கிய புள்ளி கே.பி.

அவரை சர்வதேசத் தொடர்பாளராகப் புலிகள் நியமித்தமை ஏன்? அத்தகையவர் சர்வதேசத் தரப்புகளுடன் பகிரங்கமாகத் தொடர்பாடல்களை வைத்து புலிகளின் பிரசாரத்தையோ, அமைதி முயற்சிகளையோ, சமாதான நடவடிக்கைகளையோ முன்னெடுப்பது என்பது சாத்தியப்படக் கூடியதா?

அப்படியானால், சர்வதேச பொலிஸாரால் தேடப்படும் ஒரு முக்கிய சந்தேக நபரை தமது சர்வதேசத் தொடர்பாளராகப் புலிகள் நியமித்தமை ஏன் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

அதற்குக் காரணம் உண்டு.

இலங்கை அரசுப் படைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அடுத்தடுத்துக் கைப்பற்றி வூருகையில் புலிகளின் கட்டமைப்பும் சீர்குலைந்து வருகின்றது.

நிலைமை இன்னும் மோசமானால் புலிகள் மீண்டும் முழு அளவில் கரந்தடி இயக்கமாகத் தன்னை உருமாற்றிக் கொள்ளும் தேவை ஏற்படும்.

அத்தகைய சமயத்தில் இப்போது உள்ளது போல - புலிகளின் தலைமை தனக்கு அருகில் தனது சர்வதேச தொடர்பகத்தை வைத்து இயக்குவது சாத்தியப்படாமல் போகலாம்.

புலிகள் ஒருபுறம் இலங்கை அரசுப்படைகளுடன் யுத்தம் செய்தாலும் மறுபுறம் தமது வருமானத்துக்காக சர்வதேச மட்டத்தில் பல 'பினாமி'களின் பேரில் பல்வேறு முதலீடுகளைச் செய்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

பல தபால் கம்பனிகளில் இருந்து 'சுப்பர் மார்க்கெட்டுகள்' வரை புலிகளின் பின்புலத்தில் இயங்குகின்றன.

வன்னியில் புலிகளின் கட்டமைப்புகள் ஒழுங்காக இருந்தவரை இங்கிருந்தபடியே அந்த முதலீடுகள், வருமானங்களை ஓரளவேனும் கவனித்துக் கண்காணிக்கப் புலிகளால் முடிந்தது.

இப்போது அந்தக் கட்டமைப்புகள் சிதைந்துவருகின்றன. தொடர்ந்து வன்னியில் இருந்தபடி புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் காஸ்ட்ரோவாலும் ஏனைய தலைவர்களாலும் இந்த முதலீடுகளை சரியாகக் கண்காணிக்கமுடியாமல் போகலாம் என்ற நிலைமையும் உண்டு.

அத்தகைய சந்தர்ப்பங்களில் அந்த முதலீடுகளைப் புலிகள் சார்பில் நடத்திவரும் 'பினாமிகளே' சுத்திவிடும் ஆபத்து உண்டு.

அதைத் தவிர்ப்பதற்காகவே மீண்டும் கே.பியை முன்னுக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது புலிகளின் தலைமை எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு நாடுகளிலும் உள்ள முதலீடுகளையும் அவற்றை நடத்தும் பினாமிகளையும், தம்மை நேரடியாக அறிமுகப்படுத் தாமலேயே தமது வட்டாரங்கள் மூலம் கண்காணித்து, கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, கட்டுக்குள் வைத்திருக்கும் நிர்வாகத் திறமையும் தகைமையும் கொண்டவர் கே.பி. என்பதால் அவரை இப்பொறுப்புக்கு நியமித்திருக்கின்றது புலிகளின் தலைமை.

தமக்கு கீழ் உள்ளவர்களை சாம, பேத, தான, தண்டம் என்ற எந்த வழியிலும் கையாளக்கூடியவர் கே.பி. என்பதால் அவரின் கீழ் தமது சர்வதேசப் பிரிவு சரியாகக் கட்டுப்படுத்தப்பட்டு செயற்படும் என்றும் -

அவருடன் மட்டும் தாங்கள் தொடர்புகளை வைத்திருப்பதன் மூலம் சர்வதேச ரீதியில் தங்களின் அலகுகளை சரியான கண்காணிப்பில் வைத்திருக்கமுடியும் என்றும் -

புலிகளின் தலைமை நம்புவதால்தான் இந்த நியமனம் என்று கூறப்படுகின்றது.

ஆக, இந்த சர்வதேச நியமனம் பற்றிய தகவல் சர்வதேச ரீதியில் செயற்படும் புலிகளின் கட்டமைப்புகளுக்கான அறிவித்தலேயன்றி, அமைதி முயற்சிகளிலோ சமாதான எத்தனங்களிலோ ஈடுபடும் சர்வதேச தரப்புகளுக்கான அறிவித்தல் அல்ல என்பதே நிலைமையாம்!

இனி உங்களின் செயற்பாடுகளை தலைமையின் சார்பில் வழிநடத்துபவராக கே.பி. இருப்பார் என புலிகளின் பல்வேறு சர்வதேச அலகுகளுக்கு விடுக்கப்பட்ட தகவல் அல்லது அறிவிப்புத்தான் அந்த 'தமிழ்-நெற்' செய்தி என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

நிலைமை அப்படியிருக்க, புலிகளுட னான சர்வதேசத் தொடர்பாடலுக்காக உலக நாடுகளின் இராஜதந்திரிகளும், தரப்புகளும் கே.பியைத் தேடுவதில் அர்த்தமில்லை.

'இன்டர்போல்' என்ற சர்வதேசப் பொலிஸாரே தேடி வலைவிரித்துள்ள ஒருவர் இராஜதந்திரிகளுக்கு அவ்வளவு இலகுவில் தொடர்புக்குக் கிடைத்துவிடுவார் எனக் கருதுவதும் அர்த்தமற்றதுதான்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோவில்

## உலகப் பெருமஞ்சத் திருவிழாச் சிறப்பு மலர் - 08.02.2009

# உலகப் எபருமஞ்சமாம் இணுவைத் திருமஞ்சம்

தை மாதத்தில் வரும் தைப்பூசத் திருநாள் முருகனுக்குகந்த நன் நாளாகப் போற்றப்படுகிறது. இந்த நன் நாளிலே முருகப் பெருமான் திருமஞ்சத்தில் எழுந்தருளி அடிய வர்களுக்கு அருள்பாலிப்பார்.

இந்த மஞ்சத் திருவிழாவினை முதன்மையாகக் கொண்டு இணு வைக் கந்தனுக்கென அமைக்கப் பட்ட திருமஞ்சம் தனிச் சிறப்பு வாய்ந்தது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும் 19 ஆம் நூற்றாண் டின் முற்பகுதியையும் தனது அருள் வாழ்நாளாகக் கொண்டு வாழ்ந்த இணுவைச் சித்தர் பெரிய சந்நியாசியா ரால் அமைக்கப்பட்டதே இத் திரு மஞ்சம். 1910 ஆம் ஆண்டளவில் ஆரம்பமாகிய இம் மஞ்சத் திருப்பணி 1912 ஆம் ஆண்டு பூர்த்தியாகி வெள்ளோட்டம் கண்டது. எனவே இற்றைக்கு 99 வருடங்களுக்கு முன் முன்னெடுக்கப்பட்ட ஓர் அளப் பெரிய அரும்பெரும் திருப்பணி இதுவாகும்.

உலகிலே முதன் மஞ்சம் எனப் போற்றப்படும் இத் திருமஞ்சத்தை அருளாளர் பெரிய சந்நியாசியார் ஆண்டவனின் அருள்பெற்றே உருவாக்கினார் என்பது அடியவர் களின் கருத்து. ஆண்டவன் அரு ளாளர் சந்நியாசியார் மனத்தில் அகக் கண்ணில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பை புறத்தோற்றமாக உரு வகிப்பதற்கு சிற்பாசாரியார்களை எம் பெருமான் தானே தென்னிந்தியா வில் இருந்து வரவழைத்ததாக வரலாறு கூறுகின்றது.

எனக்கோர் திருமஞ்சம் அமைப் பாயாக என அருளாளருக்குத் தெரி வித்த எம்பெருமான் நீ ஊர்காவற்றுறை துறைமுகத்திற்குச் சென்று சிற்பாசாரி யார்களை வரவேற்று அழைத்துவா எனப் பணித்தார். அவர்களை எதிர்கொள்ளச் சென்ற பெரிய சந்நியாசியாரிடம் அங்கு துறைமுகத்தில் வந்து இறங்கிய சிற்பாசாசிரியார்கள் ''பெரியவரே தாங்கள் தானே எங்களது இல்லம் வந்து எங்களை இத் தினத்தில் இங்கு வந்து சேரும்படி கூறியிருந்தீர்கள்'' என வினவி நின்றனர். பெரிய சந்நியாசியாரோ ஆலயத்தை விட்டு நான் எங்குமே செல்லவில்லையே இது ஆண்டவனின் திருவிளையாடலே என வியந்தார்.


ஆண்டவன் சித்தப்படி ஆரம்பிக் கப்பட்ட இத் திருமஞ்சப்பணி இவ்வூர் பெருமக்களாலும், அயலூர் அன்பர்களது ஆதரவுடனும் நிறைவேறி 1912 ஆம்

இணுவை
மா.ந.பரமேஸ்வரன்

ஆண்டு வெள்ளோட்டம் கண்டது. ஆலயத்திற்கு அண்மித்த சூழலில் கிழக்குப் புறமாக இடம் கோலப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட மஞ்சத் திருப் பணிக்கான இடம் இன்றும் மஞ்சத்தடி என்னும் காரணப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் இம் மஞ்சத் திருவிழாவினைக்காண மக்கள் வெள்ளம் இணுவைக் கந்தன் ஆலயத்தை வந்தடையும். பேரூந்துகளோ, காரோ இல்லாத காலம் அது. மக்கள் மாட்டுவண்டில் மூலமே இவ்வூரை வந்தடைவர். யாழ்ப்பாணத்தின் நாலாதிசை களிலும் இருந்து வந்த மக்கள் கூட்டத்தின் மாட்டுவண்டில்கள் கோயில் வாசல் எனக் கூறப் படும் இணுவில் சந்தியினின்று காங்கேசன்துறை வீதியின் வடக்குப் பக்கமாகச் சுன்னாகம் றொட்டியாலடிவரைக்கும் அதேபோன்று தெற்குப் பக்கமாகத் தாவடிச் சந்திவரைக் கும் காணப்பட்ட தாகவும், கிழக்கு மேற்காக இணுவில் மானிப்பாய் வீதியை மையமாகக்கொண்டு கோண் டாவில், சுதுமலைவரை பரந்து நின்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. மஞ்சத்தினைத் திருவீதியில் உலாவ விடுவதற் காக திடகாத்திரமிக்க மாலுமிகள் கூட்டம் வல்வெட்டித்துறையில் இருந்து பலமிக்க கப்பல் வடக்க யிறுகள், கப்பிகள் போன்றவற் றுடன் இவ்வாலயத்தை வந் தடைந்து பறை ஒலி முழங்க மஞ்சமிண்டி பொறிக்கப்படுவ தாகவும் ஊர் மக்கள் கூறுவர்.

(13 பக்கம் பார்க்க....)



பெருமஞ்சத் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

அம்பாள் மெற்றீறியல் சேல்ஸ் சென்ரர்
நகுலேஸ்வரர் வீதி, அளவெட்டி.
தொ.பே.0771276262

நியூ லங்கா பாம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

கஜசங்கவி சென்ரர் பிறிண்டேர்ஸ்
இல.237,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே.0212227885
அச்சகங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

விக்னா தொலைத் தொடர்பகம்
காங்கேசன்துறை வீதி,கோண்டாவில்.
உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத் தொடர்புச் சேவைகளுக்கும், போட்டோபிரதிகளையும் பாடசாலை உபகரணங்களையும் காகிதாதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கணேசன் சென்ரர்
புடைவை, அழகுசாதனப் பொருள்கள் விற்பனையாளர்.
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

ஆ-ராசேந்திரம்
பானு விவசாய மாளிகை
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
உரவகைகள், மருந்து, விதை தானியம் மலிவாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

இராசரத்தின பத்தர்
அன்சன் நகைத்தொழிலகம்
குமாரலிங்கம் வீதி,
இணுவில்.

து-இராமமூர்த்தி
மணவறை, முத்துச் சப்பறம், அன்னச் சோடனை, சாமி அலங்காரம், பூ வேலைகள் மற்றும் இதர சேவைகள் வழங்கில்
இணுவில் தெற்கு, இணுவில்.

கிருஸ்ணா தச்சுத் தொழிற்சாலை
கே.கே.எஸ்.வீதி,கோண்டாவில் மேற்கு.
வீட்டுத் தளபாடங்கள், வீட்டுக் கட்டட வேலைகள் ஒடருக்குச் செய்துகொடுக்கப்படும்.

துரை
மரத்தளபாட விற்பனை நிலையம்
இணுவில் தச்சுத் தொழிற்சாலை + மரஅரிவு ஆலை
கே.கே.எஸ்.வீதி,இணுவில். தியேட்டர் வீதி, இணுவில்

சிவசம்பு களஞ்சியம்
சகல விதமான அபிஷேக,பொருள் களும் - இந்தியன் பத்தி வகைகளும், மூக்குப் பொடியும் விற்பனையாளர்
இல.3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பந்தல், மணவறை சேவைகளுக்கு
இ.கணேசஐயர்(கண்ணன்)
புளியடி வைரவர் வீதி,
உடுவில்.

சக்திவேல் ஹாட்வெயர்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (இணுவில்)

LUCKY VIDEO
& PHOTO COMPLEX
K.K.S.Road, Inuvil.

மல்ரி ஒயில் இண்டஸ்றீஸ் லிமிட்டட்
காங்கேசன்துறை வீதி, இணுவில்.
தொ.பே.021 222 6887

சிவம் கிறேசர்
மட்டுவில் வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

சகல வைபவங்களுக்கும் தரமான No. I அரிசி
K.R.M
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
K.R.M மில், காங்கேசன்துறை வீதி, இணுவில்.

டென்சி வீடியோ
கொழும்பு, இணுவில்.

கிசோ
கட்டட ஒப்பந்தகாரர்
இணுவில்.

குமார்
பந்தல் சேவை
இணுவில் மேற்கு, இணுவில்.

சகல விதமான சிற்பவேலைகளையும் சிறந்தமுறையிலும் குறிந்த தவணையிலும் நம்பிக்கையுடனும் செய்துகொள்ள
வி.ஐயாத்துரை சிற்பக் கலைக்கூடம்
தாவடி வடக்கு, கொக்குவில்.

ஐங்கரன்
பந்தல் சேவை
இணுவில் மேற்கு, இணுவில்.

பெஷன் கவுஸ்
இல. 65, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஆனந்தா கட்டடப் பொருள் வாணிபம்
சிமெந்து, செங்கல், ஓடு வகைகளைப் பெறலாம்.
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

நவரத்தினம் தச்சுத் தொழிலகம்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
தளபாட உற்பத்தியும், மரஅரிவு ஆலையும்.

ரஞ்சனாஸ்
கட்டடப் பொருள் விற்பனையாளர்
மானிப்பாய்.

லிங்கம் கொமினிகேசன்
பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்.

செந்தில் கிரபிக்ஸ்
இணுவில்.

கனேந்திர
தொலைபேசி சேவை
இணுவில்.

கணபதி மருந்தகம்
இணுவில்.

அம்பாள்
ரேடேஸ், யாழ்ப்பாணம்.

கஜமுகன் மோட்டோர்ஸ்
இணுவில்.

கஜன் கிறீம் கவுஸ்
இணுவில்.

விதுசிகா ஸ்ரோர்ஸ்
இணுவில் மேற்கு.

ரூபன் பந்தல் சேவை
இணுவில் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி பவளக்கண்டு இராமநாதன்

**தோற்றம் : 11.05.1936 மறைவு : 30.01.2009**

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை நீண்ட கால வதிவிடமாகவும் தற்போது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியாவில் வசித்தவருமான எமது தாயாரின் இறுதிக் கிரியைகளிலும், இதர கிரியைகளிலும் பங்கு கொண்டவர்களுக்கும், உதவிகள் புரிந்தோருக்கும், உறவினர்கள், அயலவர்கள், அன்பர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தொலைநகல், தந்தி மூலமாக அனுதாபச் செய்தி வழங்கியோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: இ.லோகநாதன் (மகன், பணிப்பாளர் - வி.வி இராமநாதன் அன் கம்பனி பிறைவேட் லிமிட்டெட்), வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்:
04.10.1926

அம்பிகை அடியில்:
10.01.2009

## அமரர் தம்பையா மயில்வாகனம்

கடந்த 10.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பையா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.02.2009) திங்கட்கிழமை காலை கங்காதரணி தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோரின் வழிநின்று பெருமையுடன் வாழ்ந்தீரையா!
உற்றாரைப் பேணுவதில் உறவுகளுக்கு உதவுவதில்
நற்றாயைப் போலிருந்தீர் நாளெல்லாம் மகிழ்ந்திருந்த
பொற்றாலியாள் புலம்பியழப் போனதென்ன மாயமையா!!

புண்ணியம் பலவும் செய்து எமைப்புகழுடனே வாழவைத்தீர்
எண்ணிய கருமம் யாவும் இனிதே நீர் இயக்கி வைத்தீர்
கண்ணியமாக எம்மைக் கலங்காமல் காத்து நின்றீர்
நண்ணியதெங்கே ஐயா! நாள்தோறும் கலங்குகின்றோம்

வித்துவனாய் மருத்துவத்தில் விளங்கிய நின்திறமைகண்டு
எத்தனைபேர் உன்னிடத்தில் இன்புற்று வாழ்ந்தார்கள்
முத்தனைய பெறுமதியாய் முடிந்தாலும் உன் ஆயுள்
நித்தியமாய் வாழ்வீர் ஐயா நிம்மதியாய் நீர் உறங்கும்

மூண்டுவிட்ட பெருந்துன்பம் முடிவில்லாத் துன்பமையா
ஆண்டுபல சென்றாலும் ஐயா நாம் உமை மறவோம்
மாண்டுவிட்டால் மீண்டுவரும் மறுபிறப்பு இல்லாமல்
வேண்டுகின்றோம் அம்பாளின் அடிநிழலில் சாந்திபெற

துன்பத்தில் பங்குகொண்டு துயர்பகிர்ந்த யாவருக்கும்
அன்புடனே ஓடிவந்து அனைத்துதவி செய்தவர்க்கும்
இன்பமுடன் அவராத்மா சாந்திபெற இறைஞ்சியோர்க்கும்
என்புருக எம் நன்றி என்றென்றும் நல்குகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

2 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.


**நீங்கா நினைவுகளுடன் :**
**மனைவி, மக்கள், மருமக்கள், குழந்தைகள், குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தூரிகை


ஜெ.துவாரகா, தரம் -3C, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.


சு.சிவாசுதன், தரம் - 4, யாழ்.ஆனைப்பந்தி.


க.தேனோபன், தரம் - 2, யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி


ம.திபராஜ், தரம் - 8, கைதடி குருசாமி வித்தியாலயம்.



ஜே.ஜேரிமெஸ்லியா, தரம் - 3, சென்.தோமஸ். மகளிர் றோ.க.பா.


க.பிரவீத்தா, தரம் - 5 B, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.


வி.கீர்த்தனா, தரம் - 7 A, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## விடுகதை சொல்லப் போறோம்

1. சின்னத்தம்பி, சிவந்ததம்பி திறந்த வாயை மூடாத தம்பி. அவன் யார்?
தபால்பெட்டி
2. மேலே போகும் ஆனால் கீழே வராது. அது என்ன?
புகை
3. எட்டிப்பார்த்தால் புகைமயம், தொட்டுப்பார்த்தால் தண்ணீர். அது என்ன?
பனிக்கட்டி
4. என் தம்பி வித்துவான். காதை முறுக்கினால் கத்துவான். அவன் யார்?
வானொலி
5. கொக்கு நிற்கக் குளம் வற்றுகின்றது. அது என்ன?
விளக்கு
6. செக்கச் சிவந்திருக்கு, செவ்வாழை பூத்திருக்கு, வாலும் முளைத்திருக்கு வந்திருக்கிறார் சந்தைக்கு. அவர் யார்?
செத்தல் மிளகாய்
7. கறுத்த மாடும், வெள்ளை மாடும் குளத்திற்குக் குளிக்கச் சென்றன. திரும்பி வந்தது வெள்ளைமாடு அது என்ன?
உழுந்து
8. உடைத்துத் திறந்த பெட்டியை மூடி வைக்க முடியாது. அது என்ன?
தேங்காய்
9. தொட்டால் எம்மை நடுங்க வைக்கும். சூரியனைக் கண்டால் நடுங்கி உருகும். அது என்ன?
ஐஸ்கட்டி
10. இவன் அழுதால் உலகம் சிரிக்கும். அவன் யார்? வானம்

பா.நிறோஜினி, தரம்-7,
பா/இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.




"என்னைக் காப்பாற்றுங்கள்" என்ற அந்த அலறலைக் கேட்டதும் இளவரசர்களுக்கு இன்னும் பயம் அதிகரித்தது.

"நம்மைப் போலவே வேறு சிலரையும் மந்திரக்கிழவி கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கிறாளோ?"

என்று சந்தேகத்தோடு கூறினான் சந்திரவர்மன்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன் சந்திரா! எதற்கும் அந்த அலறல் ஏன் எழுந்தது என்று பார்த்து விட்டு வருவோம்" என்றான் இந்திரவர்மன். இப்படிக் கூறியதோடு மட்டுமல்லாது மாளிகையை நகரவும் ஆரம்பித்துவிட்டான் இந்திரவர்மன். எனினும் அவனது தோளை இறுக அழுத்தி, தன்சுட்டு விரலை முன்னால் நீட்டினான் சந்திரவர்மன். அவன் விரல் நீட்டிய திசையிலே உடலெங்கும் தீ கொழுந்து விட்டெரிய, ஒரு பெரிய மலைப்பாம்பு ஒன்று இவர்களை நோக்கி வெகுவேகமாக வந்து கொண்டிருந்தது. தன் பெரிய நாக்கை வெளியே நீட்டி, இளவரசர்களை அப்படியே விழுங்குவது போன்ற ஆவேசத்துடன் வந்து கொண்டிருந்த பாம்பைக் கண்டதும் முன்னகர்ந்து கொண்டிருந்த இந்திரவர்மன் அப்படியே நின்றான்.



ஏதோ ஒரு அர்த்தத்தோடு சந்திரவர்மனை நோக்கினான். அதன்பிறகு இருவரது கரங்களும் தமது வாளை உருவின.

(தொடரும்)




## நாய்கள் ஏன் ஒன்றோடு ஒன்று சண்டையிடுகின்றன?

நாய்கள் யாவும் ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. காட்டில் ஒருநாள் விருந்து நடந்தது. அதற்கு நாய்களும் அழைக்கப்பட்டிருந்தன. விழாவிற்கு யார் தலைமை ஏற்பது என்ற கேள்வி வந்தபோது முயல் ஒரு நாயைச் சுட்டிக்காட்டி இவர் தலைமை ஏற்கலாம் என்றது. அதைக்கேட்ட மற்ற நாய் 'அது எலும்புக்கு அலையும் நாய். அவனைவிட நான் உயர்ந்தவன்' என்றது. அதைக்கேட்ட மூன்றாவது நாய் "நான் சுத்தமான நிறமும் அழகும் அதனால் நானே தலைவன்" என்றது. நாய்கள் தங்களுக்குள்ளாக அடித்துக் கொள்ளத் துவங்கி விருந்தைச் சீர்குலைத்தன. அதைக்கண்ட கடவுள் "இனிமேல் நாய்கள் ஒன்றுகூடினால் அது சண்டையாகத்தான் மாறும் தனித்தனியே திரியுங்கள்" என விரட்டினார். அந்த நாளில் இருந்து நாய்கள் ஒன்றையொன்று கண்டால் சண்டையிடத் துவங்கிவிடுகின்றன.

ச.சிவமோகன், தரம்-8A, யா/வைத்திஸ்வராக் கல்லூரி

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்



## பூக்களின் பலன்கள்

பூஜைகளில் ஒவ்வொரு பூக்களை பயன்படுத்தும்போதும் ஒவ்வொரு நன்மை ஏற்படுகின்றது.



| | |
|---|---|
| செந்தாமரை | - செல்வம், ஆயுள், சூரியன் அருள் கிடைக்கும் |
| வெண்தாமரை | - நிம்மதியான வாழ்வு தரும். |
| மஞ்சள் அரளி | - கடன்களை நீக்கும். |
| பொன் அரளி | - கன்னியர்களுக்குத் திருமணம் நடக்கும். |
| செவ்வந்தி | - குரு கிரகப் பீடை நீங்கும். |
| சிவப்பு அரளி | - குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். |
| நீலோற்பவம் | - சனிபகவானின் அருள் கிட்டும். |
| மனோரஞ்சிதம் | - தம்பதிகளுள் ஒற்றுமை உண்டாகும். |
| பாரிஜாதம், அல்லிப் பூ | - பக்தி, அதிர்ஷ்டம் இவைகளைத் தரும். |
| மங்கிய வெள்ளைப்பூக்கள் | - புதன் கிரகத்தின் அருளைத்தரும். |
| ரோஜா | - உடலுக்கும், உள்ளத்திற்கும் பலம் உண்டாகும். |
| சம்பங்கி | - வாயுத்தொல்லைகளை அகற்றும். |
| ஜாதிப்பூ | - கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிவப்பு நிறக்கண்களைக் குணமாக்கும். |
| மல்லிகை | - கண்பார்வைக் கோளாறுகளைக் குணமாக்கும். |





ஆ.தர்மிகா, தரம்-8, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

## வனவிருந்து

காட்டிலுள்ள மேட்டின் மீது
கூட்ட மென்ன கூட்டமோ
நாட்டியங்கள் பாட்டினோடு
நல் விருந்தாய் கேட்குதே
குயில் களிப்பில் குழலிசைக்க
மயில் மகிழ்ந்தே ஆடுதே
முயலினங்கள் முகமலர்ந்தே
முதலிடத்தை நாடுதே.

சு.விஜிதா, தரம் - 9ஏ,
யா/மகாஜனக்கல்லூரி.

## அம்மா



பத்து மாதம் பத்திரமாய்
கருவில் சுமந்தாய் அம்மா
அன்று நீ அடைந்த துன்பம்
நான் அறியேன் அம்மா
உனது துன்பத்தைப் புறம் வைத்து
என்னைக் கல்விகற்க வைத்து
பலர் போற்ற அன்பால் வளர்க்கின்ற
என் ஆசை அம்மாவே
நோய் எனைத் தீண்டினால்
துடிதுடித்துப் போவாயே
இரவெல்லாம் துயில்நீத்து என்னைக்
கண்மணிபோல் பார்ப்பாயே
பிறப்பொன்று எடுத்தாலும்
அத்தனை ஜென்மங்களும்
நீ என் தாயாக வேண்டும்
அம்மா!

பு.ஆரணி, தரம் - 8டி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

மாணவர்களே! உங்களின் ஆற்றலை மேம்படுத்துவதுடன் ஊக்கத்தையும் தருவதற்கு உதயனில் வாரந்தோறும் புதிய அம்சம் ஒன்று மலர்கிறது. 'விடை தெரியுமா?' பகுதியில் பங்குபற்றி உங்கள் பொதுஅறிவைப் பெருக்கிப் பரிசில்களையும் வெல்லுங்கள்.

### விடை தெரியுமா? - 02

1. யாழ்ப்பாணத்தில் இன்று எஞ்சியுள்ள ஒரேயொரு தெருமூடி மடம் எந்தப் பிரதேசத்தில் உள்ளது?
2. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
3. சிறுவர்களை அதிகம் கவர்ந்த 'ஹரி பொட்டர்' என்ற நாவலை எழுதியவர் யார்?
4. பங்களாதேஷ்பிரதமரின்பெயரென்ன?
5. குடாநாட்டை உலுக்கிய 'நிஷா' புயல் எப்போது வீசியது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 18.02.2009 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள். சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள் காப்புறுதி பற்றி அறிந்துகொள்ளுங்கள்
ஆயுள் காப்புறுதி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் அன்பானவர்களுக்கு பாதுகாப்பை வழங்குங்கள்

செலிங்கோ லை∴ப் பெருமையுடன் அறிமுகப்படுத்தும்,



# ஆயுள் காப்புறுதி வாரம்

பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் (011) 2 461 461

செலிங்கோ லை∴ப்




செலிங்கோ இன்சுவரன்ஸ் பி எல் சி

சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ

134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் - PQ 24 தொலைபேசி: (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விநியோகஸ்தர்கள் தேவை

Nilkamal®

Sri lanka's Favourite Furniture

இலங்கையரின் இதயங்கவர் தளபாடம்




ஆசியாவிலேயே பிளாஸ்டிக் தளபாடங்களை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய நிறுவனம் நில்கமல்

கிளிநொச்சி, யாழ்ப்பாணம்
ஆகிய பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.


பின்வரும் தகைமைகள் வேண்டப்படுகின்றன:

- வங்கி உத்தரவாதம்
- போதியளவு களஞ்சிய வசதி
- விநியோகத்திற்குத் தேவையான வாகனம், ஊழியர்கள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டிருத்தல்

**உங்கள் விண்ணப்பங்களை 7 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்**

சந்தைப்படுத்தல் முகாமையாளர்
NILKAMAL ESWARAN PLASTIC (PVT.) LTD.,
328, Madapatha Road, Batakettara,
Piliyandala.
Contact: 011 4215267, 011 4212661-4 E.mail:mkt@nilkamal.com.lk


## உலகப் பெருமஞ்சத் திருவீதியுலா காண வாரீர்



பாரோங்கும் ஈழமதின் உயர்மிகு சிறப்பை
பேரோங்கும் யாழ்.குடாவதின் நல் நிலைப்பை
ஊரோங்கும் இணுவைப் பதியின் இருப்பை
வானோங்க வைக்கும் உயர் மஞ்ச உகப்பை.

ஒப்பிலா முருகன் உவந்து ஒளிமிக நன்றே!
செப்பரிய சிறப்புடன் இருமுறை வலம் வந்தே,
எப்பொழுதும் நிலைத்த மஞ்சம் இது வொன்றே!
இப் புவியில் நூற்றாண்டு மேல் உருண்டதுவும் நன்றே!

மேன்மைச் சிற்ப மேதா விலாசமாய் திகழும்
வான் புகழ் மஞ்சம் கண்ணுற்று மனம் மகிழும்
தேன்போல் நிலைத்த உயர் சோத்தாய் உருளும்
தன்னிகர் மஞ்ச வடந்தொட்டு இழுக்க வாரீர்

- சண்முகலிங்கம் முகுந்தன்,
இணுவில்.

# உலகப் பெருமஞ்சமாம்.....

(08 பக்கத் தொடர்ச்சி....)

இத்தகைய பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட இத் திருமஞ்சம் காலமாற்றம் காரணமாகவும், இடையிடையே ஏற்பட்ட பொருளாதார மந்த நிலைமை காரணமாகவும் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் வீதி உலா வராமல் ஆலயத்தின் தெற்கு வீதியில் நிலையாக நிறுத்தி வைக்கப்பட்டது. இக்கால கட்டம் இம்மஞ்சப்பவனி சைவமக்கள் மனதில் நின்றும் சிறிது நீங்கிக்கொள்ள ஏதுவானது.

ஆனால் ஆண்டவன் கருணையாலும், தாராளமனப்பான்மை கொண்ட கொடை வள்ளல்களின் பெருமுயற்சியாலும் மீண்டும் இத் திருமஞ்சம் இன்றைக்கு 25 ஆண்டுகளாகத் தொடர்ந்தும் தங்கு தடையின்றி வருடத்தில் இரு தினங்கள் பவனி வருவது எமது புண்ணியப்பேறே.

48 அடி உயரத்தைக் கொண்ட இத்திருமஞ்சம் இன்று புதுப்பொலிவு பெற்று திரு வீதிவலம் வருகின்றது. இப்படியான பிரசித்திபெற்ற திரு மஞ்சம் யாழ்ப்பாணத்தின் மத்தியில் உள்ள இணுவில் கிராமத்தில் இருப்பது இளைய சமுதாயத்தினர் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

சரித்திரப் பெருமைமிக்க இணுவைக் கந்தன் ஆலயத்தில் தைப்பூசத்தினத்திலும், ஆனிமாத 25 நாள் மகோற்சவத்தின் பன்னிரண்டாம் திருவிழாவிலும் ஆறுமுகப் பெருமானைத் தாங்கிய வண்ணம் அருள்பாலித்து வருகின்றது இத் திருமஞ்சம்.

காலத்தால் முற்பட்டதால் சைவ உலகின் முதல் மஞ்சமெனக் கருதப்படும் இத் திருமஞ்சம் அளவுப்பிரமாணத்தால் ஒரு வியக்கத்தக்க தன்மையைக் கொண்டு காணப்படுவதால் உலகப் பெருமஞ்சம் எனக் கருதப்படுகின்றது. தான் உருவாகிய இடத்திற்கு மஞ்சத்தடி எனும் திருநாமத்தையும், தான் உருண்டு வந்த பாதையை இணுவில் மானிப்பாய் வீதிக்கு அணி சேர்த்தும் உலகப் பெருமஞ்சம் எனப் பெருமை பெற்றிருக்கும் இத் திருமஞ்சத்தைக் காணக் கண்கோடி வேண்டும். நமது முன்னோர்கள் நமக்களித்த கலைப் பொக்கிசங்களில் அதி உன்னதமான மரச்சிற்ப அமைப்பைத் தன்னகத்தே கொண்டு காணப்படும் இத் திருமஞ்சத்தைச் சைவ மக்கள் ஒவ்வொருவரும் தமது வாழ் நாளில் ஒருதரமாவது தரிசிக்க வேண்டும்.

***




# இலங்கை வங்கி, வல்வெட்டித்துறை

விரிவாக்கற்கிளைத் திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம் அகமகிழ்கின்றோம்
உரியவர்க்கு உயரிய நன்றி நவில்கின்றோம்

வல்வை பெற்றெடுத்த அரும் புதல்வா சிவா
ஆதிவைரவரின் அரிய அருள் பெற்ற சிவா
வள்ளியம்மை ஈன்றெடுத்த வைர நெஞ்சனே சிவா
வல்வை சிவனின் அரும்பெரும் சொத்தே சிவா
மண்ணதில் வங்கியின் சிங்கமே சிவா
கன்னித் தமிழின் பற்றினால் பத்திரிகைகளை
எண்ணற்ற உண்மைகளினால் திணறடித்த சிவா

## உயர்திரு. நடராசா சிவரட்ணம்

அவர்கள் இலங்கை வங்கி வடமாகாண அதிஉயர் பதவியாம்
உதவிப் பொதுமுகாமையாளர் ஆகப்
பதவி உயர்வு பெற்றதை எம் பேறாகக்கருதி
மனதார வாழ்த்துகின்றோம்
மாலை இட்டுப் போற்றுகிறோம்
மக்கள் சேவையே மகேசன் சேவையென நின்சேவை மேலோங்கி வளர்க!
வாழி நீடூழி வாழி!!

ஊக்கமளிப்போர்:
அம்பாள் வெதுப்பகம்,
சிவபுர வீதி, வல்வெட்டித்துறை.

வல்வை மக்கள் சார்பாக வாழ்த்துவோர்:
வைத்தியசாலை அபிவிருத்திச்சபை,
வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலிப் பெண்ணின் இன்னொரு முகம்

சொந்த நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படும் அவலம் விஸ்வரூபம் எடுத்ததில், ஐந்து கண்டங்களில் இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் தஞ்சம் புகுந்திருக்கும் சூழல். கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆயுதமேந்திப் போராடி வரும் போராளிகள் ஒருபக்கம். சொந்த மக்கள்



மீதே தரை, கப்பல் மற்றும் வான்வழி என சிங்களப் பேரினவாத இராணுவம் நடத்தும் தாக்குதலை உலக நாடுகள் வேடிக்கைப் பார்க்கும் அவலம் மறு பக்கம்.

1960 இல் சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி ஐந்து லட்சம் மலையகத் தமிழர்களை ஒட்டுமொத்தமாகத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவதில் இருந்து ஈழ அவலத்தில் இந்தியாவுக்கான பங்கு தொடங்குகிறது. உழைத்து, உழைத்து தேயிலைத் தோட்டங்களை உருவாக்கித் தந்த அந்த மலையகத் தமிழர்கள் வெறும் கையுடன் தமிழகம் வந்திறங்கி அவர்களில் பலர் அந்த வெறுங்கையை ஏந்தி, பிச்சை எடுக்கத் தள்ளப்பட்டனர் என்பதுதான் கொடுமையின் உச்சக் கட்டம்.

இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுன என்கிற ஜே.வி.பி. கட்சியினர் 1971 இல் ஆயுதமேந்தி கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அதை அடக்க இந்தியப் படையும், ஆயுதமும் அனுப்பப்பட்ட சரித்திரம் இலங்கைக்கு என்றைக்கும் இந்தியா பக்கபலமாக இருக்கும் என்பதை உலகுக்கும் ஈழத் தமிழனுக்கும் சொல்லாமல் சொல்லியது. பாகிஸ்தானைத் துண்டாடி வங்கதேசம் பிரிந்தபோது அதை வேடிக்கை பார்த்த இலங்கைக்கு, தமிழக மீனவர்களின் உரிமையான கச்சதீவை விட்டுக் கொடுத்தது இந்திரா காந்தியின் இந்திய அரசு. காஷ்மீரில் இருந்து ஒரு பிடி மண்ணைக்கூட விட்டுக் கொடுக்க மாட்டோம் என்கிற இந்தியக் குடியரசுதான் பாகிஸ்தானில் இருந்து வங்க தேசத்தைத் துண்டாடிவிட்டு, இந்தியாவின் கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்தது.

ஈழத் தமிழனின் உரிமைகள்



மறுக்கப்பட்டு, உயிர்கள் பறிக்கப்பட்ட அவலநிலையில் வேறு வழியில்லாமல் ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்திரா காந்தி அரசு 1983 இல் அளித்த பயிற்சி அங்கு தமிழீழம் மலர வேண்டும் என்பதற்கல்ல. அது, இலங்கை அரசை அச்சுறுத்த போராளிகளைப் பயன்படுத்திக் கொண்ட இந்தி(ரா)ய அரசின் குள்ளநரித்தனம்.

இந்தநிலையில் வந்த ராஜீவ் காந்தி தனது நீண்ட மூக்கை ஈழப் பிரச்சினையில் நுழைத்தார். இதிலிருந்தே இலங்கை-இந்திய கறுப்புச் சரித்திரத்துக்குச் சிவப்புச் சாயம் பூசப்பட்டது.

ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தம் போடப்பட்டது. இந்திராவின் குள்ள நரித்தனத்தை மிஞ்சும் ஒரு காரியத்தை ஜெயவர்த்தன செய்து முடித்தார். அதாவது, ஒப்பந்தத்தை அமுலாக்கும் பொறுப்பு இந்திய அரசிடம், அதாவது ராஜீவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, தமிழ்ப் படையினரின் ஆயுதங்களைத் திரும்பப் பெற இந்தியப் படையினரின் உதவியை இலங்கை நாடியது. ஆக்கிரமிப்புப் பேராசையில் இருந்த ராஜீவும் இதற்குப் பலிக்கடா ஆனார்.

பிரபாகரனும் ஆயுதங்களை ஒப்படைத்து விடுவார். மூன்று நாள்களில் வேலை முடிந்து விடும் என்றுகூறி யாழ்ப்பாணம் சென்ற இந்தியப் படை திரும்பி வர மூன்று ஆண்டுகள் ஆனது. பிரபாகரனும் ஆயுதத்தை ஒப்படைக்கவில்லை. சுதந்திர தமிழ் ஈழத்தை உருவாக்கும் முயற்சியையும் கைவிடவில்லை என்பதுதான் இந்திய-இலங்கை அரசுகளின் முகத்தில் அறைந்த உண்மை.

தமிழகத்தில் இருந்து ஒக்டோபர் 3, 1987 இல் திரும்பிக் கொண்டிருந்த புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட 13 பேரை பருத்தித்துறை அருகே கடலில் கைது செய்தது, இலங்கை அரசு. அமைதிப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே அவர்களை உயிரோடு விடக்கூடாது என்று கங்கணம் கட்டியது இலங்கை அரசு. அந்தப் போராளிகள் சயனைட் குப்பிகளைக் கடித்து உயிரை விட்டனர். இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் தான், எங்களுடைய இராணுவம் பெரியது எங்களால் இருபது ஆண்டுகள் போராட முடியும் என்கிற திமிரோடு இலங்கையில் திரிந்த இந்தியப் படையினரின் 1,300 வீரர்களை கொன்று குவித்தனர், போராளிகள்.

ராஜீவின் நீண்ட மூக்கு உடைந்த அந்த ஆத்திரத்தில் ஈழப்பெண்களை சீரழித்தார்கள். அப்பாவித் தமிழர்களைப் பலி கொடுத்தார்கள். வி.பி.சிங் ஆட்சிக்கு வந்ததும் இலங்கையில் ஈழப் பெண்களை துகிலுரித்து பலாத்காரம் செய்த இந்திய அமைதிப் படையைத் திரும்ப அழைத்துக் கொண்டார்.

தமிழர்களின் நலனைப் பாதுகாத்த ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தத்தைப் போராளிகள் ஏற்க மறுத்து விட்டார்கள் என்று தமிழகக் காங்கிரஸார் இன்றும் வாய் கிழிக்கிறார்கள். ஆனால், அந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இலங்கையில் இந்திய ஒயில் கோப்பரேஷனுக்குச் சொந்தமான நூற்றுக்கும் மேற்பட்ட கிளைகள் இலங்கையில் உருவாகின. ஆக, இது யாருடைய நலனைக் கருத்தில் கொண்டு போடப்பட்ட ஒப்பந்தம்? அதில் எப்படி தமிழனுக்குத் தீர்வு கிடைக்கும்?

ராஜீவ் தூக்கிப் பிடித்த இலங்கையுடனான ஒப்பந்தத்துக்கு நீண்டகால குறிக்கோள் எதுவும் இல்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

ராஜீவ் கொலைக்குப் பின், இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்டனர். ஹிந்து ராம், சோ, சுப்பிரமணிய சுவாமி, ஜெயலலிதா, ஞானசேகரன், தங்கபாலு, இளங்கோவன் போன்றோர், ராஜீவ் கொலையால் ஈழத் தமிழனின் பிரச்சினை திசைமாறிப் போனதாகப் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

நாம் கேட்கிறோம். 60 இல் ஏற்பட்ட சாஸ்திரி-சிறிமாவோ ஒப்பந்தம் எந்தத் தமிழனின் நலனைக் காத்தது? இந்திரா கச்சதீவை தாரை வார்த்துக் கொடுத்தது ஈழத் தமிழனின் நலனுக்காகவா? ராஜீவ் காந்தி அமைதிப் படையை அனுப்பி, தமிழ்ப் பெண்களை சீரழித்து போராளிகளின் எண்ணிக்கையையும் ஆவேசத்தையும் அதிகரிக்கச் செய்தது தமிழ் மக்கள் மீதான அக்கறையிலா? ஏதோ ராஜீவ் காந்தி கொலையால் புலிகளை எதிர்ப்பது போல் காட்டிக் கொள்ளும் காங்கிரஸ்காரர்களுக்கு ராஜபக்ஷவுடன் அப்படியென்ன இணக்கம் வேண்டி கிடக்கிறது? காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர் ஹசன் அலிக்கு ஒரு நாட்டின் அதிபரான ராஜபக்ஷ வாழ்த்துக் கடிதம் எழுத காரணம் என்ன? இதிலெல்லாம் தமிழனின் நலன் என்ன இருக்கிறது?

பாகிஸ்தானும், சீனாவும் இலங்கையோடு கொஞ்சிக் குலாவிடக் கூடாது என்கிற முன்னெச்சரிக்கை உணர்வுடன், ஓடோடிச் சென்று இலங்கைக்கு ஆயுத உதவியைச் செய்தது இந்திய அரசு.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நளினியின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யும் படி பரிந்துரைத்த ராஜீவ் மனைவி சோனியாவை தியாகத்தின் மறு உருவம் என்கிறார்கள் கதர் சட்டை கோடீஸ்வரர்கள்.

அதே நளினியை வேலூர் சிறையில் சந்தித்துச் சென்றார், ராஜீவ்-சோனியா தம்பதியின் மகள் பிரியங்கா. ராஜீவ் கொலையாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்த பெங்களூர் ரங்கநாத்தை சந்தித்து சோனியா பேசிய விவகாரம் அண்மையில் தான் வெளியானது.

இவற்றை எல்லாம் கவனித்தபோது சாஸ்திரி, இந்திரா, ராஜீவ் காந்தி போன்றோர்கள் ஈழ மண்ணுக்குச் செய்த



துரோகத்தை சோனியா தலைமையிலான காங்கிரஸ் மற்றும் இந்தியக் குடியரசு செய்யாது என்கிற ஒரு மாயை உருவானது என்னவோ உண்மைதான். சோனியா குடும்பத்தின் கருணையே கருணை என்று காங்கிரஸ்காரர்கள் போஸ்டர்களை அச்சிட்டு மகிழ்ந்ததையும் மறக்க முடியாது. ஆனால், இந்த மாயை ஒரு ஏமாற்று வேலை. சோனியா என்ன பேசினார் என்பதை பெங்களூர் ரங்கநாத், நளினி போன்றோரின் பத்திரிகை பேட்டிகளில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

''ராஜீவ் காந்தியை ஏன் கொன்றீர்கள்?''

''ராஜீவ் காந்தியை கொல்ல வந்தவர்கள் என்னென்ன பேசிக் கொண்டார்கள்?''

''இதில் யாராருக்குத் தொடர்பு இருக்கிறது?''

''இந்தக் கொலைத் திட்டத்தில் மற்றவர்களின் பங்கு என்ன?''

''இந்தப் படுகொலை ராஜீவோடு நின்று விடுமா? அவரது வாரிசுகளான எனக்கும், எனது பிள்ளைகளுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்படுமா?''

இவைபோன்ற கேள்விகளையே சோனியாவும் பிரியங்காவும் கேட்டனர் என்று நளினி மற்றும் ரங்கநாத் ஆகியோர் தெரிவித்திருக்கிறார்கள்.

இதில், அந்த இறுதிக் கேள்வி தான் முக்கியத்துவம் வாய்ந்தது. ராஜீவைக் கொன்றவர்களால் தமக்கும், தமது குடும்பத்துக்கும் ஏதாவது அச்சுறுத்தல் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளவே சோனியா முயல்கிறார். அப்படியென்றால் அவருக்குள் ஒரு நெருடல் இருக்கத்தான் செய்கிறது. அந்த நெருடல் என்ன? ராஜீவ் காந்தியின் அமைதிப்படை இலங்கையில் செய்த அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட வேதனைப்பட்ட எத்தனை, எத்தனையோ பேர் மாவீரர்களாக மாறிவிட்ட நிலையில் அவர்களால் நாமும் நமது குடும்பமும் பழி வீங்கப்படுவோமா என்கிற பயமே சோனியா குடும்பத்தை அச்சுறுத்தி வருகிறது.



புலி வாலைப் பிடித்தால் விட்டுவிடக் கூடாது. விட்டால் அது கடித்துவிடும் என்கிற போக்கில், தன் கணவர் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் தேடாமல் அடிபட்ட பாம்பை முற்றிலும் கொன்று விட்டால் வரும் காலத்தில் அது திரும்ப வந்து கடிக்கும் என்று அச்சப்பட வேண்டியதில்லை என்கிற நிலையிலேயே சோனியா குடும்பம் இருக்கிறது. இந்திரா, ராஜீவ் போன்றோர் கூட ஆக்கிரமிப்பு என்கிற பேராசையால் இலங்கைக்கு உதவினார்கள். ஆனால், சோனியாவே அடிப்படை ஆதாரமற்ற உயிர் பயத்தால் வேரோடும் வேரடி மண்ணோடும் தமிழ் மக்களைக் கொன்றொழிக்க முயன்று வருகிறார். சோனியாவின் ஆசையை நிறைவேற்றியே ஆகவேண்டிய பொறுப்பிலிருக்கும் மன்மோகன் சிங்குக்கு வேறு வழி கிடையாது.

படையினரையும், இராணுவ அதிகாரிகளையும், ராடார்களையும், வட்டியில்லா கடன்களையும் வழங்கி, சோனியாவின் கனவில் வந்து பயமுறுத்தும் தமிழ் மக்களை கொன்றொழித்து வருகிறார் மன்மோகன் சிங். அதிலும் எம்.கே.நாராயணன், சிவ்சங்கர் மேனன் போன்ற பாலக்காட்டு பார்ப்பன அதிகாரிகளும் சோனியா மனதில் கொளுந்து விட்டெரியும் பய நெருப்புக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சோனியாவைச் சந்தித்த பெங்களூர் ரங்கநாத், ''ராஜீவ் கொலையாளிகள் சந்திராசாமி, சுப்பிரமணிசுவாமி பற்றியும் பேசிக் கொண்டார்கள்'' என்று சொன்னதை சோனியா காதில் போட்டுக் கொள்ளாதது ஏன்?

**தமிழகத்திலிருந்து வெற்றி**

ஒவ்வொரு பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போதும் சுப்பிரமணிய சுவாமி, ராஜீவ் கொலையில் சோனியாவின் பங்கிருக்கிறது என்று சொல்லி வரும் நிலையில் திருமாவளவனின் உருவப் பொம்மையை எரிக்கும் காங்கிரஸார், சுப்பிரமணிய சுவாமியின் உருவப் பொம்மையை எரிக்காதது ஏன்?

விடயத்துக்கு வருவோம். சோனியாவின் அர்த்தமற்ற, அடிப்படையற்ற அச்சத்தால், பயத்தால் ஈழ மக்கள் இன்றளவும் இன்னல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கணவர் ராஜீவ் செய்த தவறைத் திருத்திக்கொள்ள வழியிருக்கும் போது, அந்தத் தவறைத் திரும்பச் செய்வதன் மூலம் தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று சோனியா காந்தி நினைக்கிறார் போலும். இதற்கெல்லாம் காலம் தான் இனி பதில் சொல்லும்!. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த மானுடம்

சிறுகதை

நெஞ்சம் கனத்து முகம் இறுகிக் கொள்கிறது. முகமாலை சூனியப் பிரதேசத்தின் வன்னிப்பக்க ஏ9 வீதியின் அந்தத்தை எங்களது பிக்கப் வாகனம் அடைந்தபோது நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மேலிருக்கும். எங்கள் வாகனத்திற்குப் பின்னால் இன்னொரு பிக்கப்பும் ஹைஏஸும் அணிவகுத்து வந்தன. பிக்கப் வாகனத்தின் ஹெட்லையிற்றின் பிரகாசத்தில் வீதிக்குக் குறுக்கே இடப்பட்டிருந்த தடைத் துலாவிற்கு முன்னால் கரங்களில் துப்பாக்கிகளை ஏந்திய இராணுவச் சீருடை தரித்த இளம் பெண்பிள்ளைகள் நால்வர் நின்றிருந்தனர். வானத்தில் கருகுமெனக் கவிந்திருக்கும் இருட்பரப்பை ஊடுருவிக் கண்சிமிட்டும் உடுக்களும் அவற்றின் கீழ்ப்பரப்பில் அலையும் வெளவால்களும் சூழ்ந்திருக்க எல்லைக்காவலுக்குக் கரத்தில் ஆயுதமேந்தி அவர்கள் நின்றிருந்தமை ஹெட்லைமிற் வெளிச்சத்தில் நன்கு புலனாகியது.

ஏன் இவர்கள் இங்கு நிற்கிறார்கள்? மனம் கனத்துக் கொள்கிறது.

அநுராதபுரத்தில் நடந்து முடிந்த பிரதேச செயலாளர்களுக்கான கருத்தரங்கு முற்றுப்பெற நண்பகல் ஒரு மணியாகிவிட்டது. அவசர அவசரமாக மதிய உணவை விழுங்கிவிட்டு பிக்கப்பில் ஏறிக் கொண்டேன். என்னுடன் மூவர் ஏறிக்கொண்டனர்.

''வின்சன், எப்படியாவது ஐந்தரைக்குள் முகமாலையை அடைந்துவிட வேண்டும்'' என்று எனது வாகன சாரதிக்குக் கூறினேன்.

பிக்கப் வேகமாகப் புறப்பட்டது. எங்களுக்குப் பின்னால் மேலதிக அரசாங்க அதிபரைச் சுமந்தபடி இன்னொரு பிக்கப்பும், ஏனைய பிரதேச செயலாளர்களைச் சுமந்தபடி ஹைஏஸ் வானொன்றும் சீறிக்கொண்டு வந்தன. எப்படியும் வவுனியாவைக் கடந்து புளியங்குளத்திற்குள் புகுந்துவிடலாம். முகமாலையை ஐந்தரைக்குள் எப்படியும் அடைந்துவிட வேண்டுமென்ற அவசரம் எங்கள் எல்லோரிடமும் காணப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு எப்படியாவது சென்று கட்டிலில் விழுந்தால்தான் நிம்மதி ஏற்படும்.

பிக்கப் மிக வேகமாக வீதியில் விரைந்தது.

''முப்பது நிமிடங்கள் நாங்க பிந்திப்போனாலும் பரவாயில்லை. முப்பது வரியங்கள் முந்திப்போகக்கூடாது'' என்றார் ஒரு பிரதேச செயலாளர் சிரித்தபடி. பிக்கப்பின் வேகம் அவருக்குக் கலக்கத்தைத் தந்திருக்க வேண்டும். வின்சனின் வேகம் குறைந்தது.

''மெதுவாகப் போனாலும் நேரம் இருக்குது. போயிடலாம். தடைமுகாம் ஐந்தரைக்குத்தான் மூடப்படும். அப்ப ஆறுமணிக்குத்தான் வன்னியில் மூடப்படும். தமிழீழ நேரத்திற்கும், ஸ்ரீலங்கா நேரத்திற்கும் அரைமணி வித்தியாசம். ''

எல்லோருக்கும் மனதில் சற்று நிம்மதி விரிந்தது.

''பறியர் போடப்பட்டால் மருதங்கேணிக்குப் போய் ஏஜியோட தங்கலாம்.''

''அதுக்கு வேறு தனியாகப் பொடியளிட்ட பெமிசன் எடுக்க வேணும் தெரியுமே?''

''ஏ-9 றோட் திறந்தும் நிம்மதியாகப் பயணம் செய்யமுடியவில்லை. எத்தனை மினக்கேடு? எத்தனை சோதனை? முன்னர் எங்களது பயணம் எவ்வளவு கலகலப்பாக இருந்தது?

பிக்கப் பளைத் தடைமுகாமை அடைந்தபோது சரியாக மாலை ஐந்துமணியாகியிருந்தது. எங்களது வாகனத்திற்காகவே காத்திருந்தது போல பையன்கள் வீதிக்குக் குறுக்கே தடைத் துலாவை இறக்கிக் கட்டினார்கள்.

பிக்கப்பிலிருந்து அனைவரும் வேகமாக இறங்கினோம்.

''எங்களை விட்டிட்டு பறியரைப் போடுங்கோ தம்பிமார். இப்ப உங்கட நேரம் ஐந்து தானே? ஐந்தரைக்குத்தானே மூடவேணும்...''

''உங்கட புதியநேரம் ஐந்தரையெண்டால் எங்கட பழையநேரம் ஐந்துதான். ஐந்துக்குத்தான் பறியர் மூடுகிறது. உங்களை இப்ப விட்டால் அங்க சூனியப் பிரதேசத்தில ஐ.சி.ஆர்.சி இல்லை. அங்கால ஆமி தயாராக நிற்குது. சூடுதான் படுவியள்...''

''நீங்க விடுங்கோ..... நாங்க அதைப் பார்த்துக் கொள்ளுறம். அவங்கள் விடுவாங்கள்''

அந்த இளம்பிள்ளை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தில் படிந்திருந்த உணர்வினைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

(16 பக்கம் பார்க்க...)



ஈழத்து இலக்கியப் பரப்பில் குறிப்பாக சிறுகதை, நாவல் துறைகளில் 'செங்கை ஆழியான்' மிகப் பிரபல்யமானவர். அத்துறைகளுக்கு மிகவும் அதிகமாகப் பங்களிப்பு வழங்கியுள்ளவர். இவரது இயற்பெயர் கந்தையா குணராசா. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப்பட்டதாரி.

இலங்கை நிர்வாக சேவை அலுவலராக அரச சேவையில் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், வன்னி மாவட்டத்திலும் உயர் பதவி வகித்து ஓய்வுபெற்றவர். யாழ்.பல்கலைக் கழகத்தின் பதிவாளராகவும் பதவி வகித்தவர். அறுபதுகளில் புனைகதைப் படைப்புலகில் அடியெடுத்து வைத்தவர்; இலக்கிய ஆர்வலர்களுக்கு அவர் 'செங்கை ஆழியான்':

நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும், குறுநாவல்கள், நாவல்கள் என்ற வகையில் நாற்பது வரையிலான ஆக்கங்களையும் எழுதிக் குவித்தவர்.

அவற்றுக்கு மேலாக பல கல்விசார் நூல்களையும், ஆய்வு நூல்களையும் எழுதி வெளியிட்டு மாணவ சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்குகிறார்.

தமது இலக்கிய ஆக்கங்களுக்காக இருமுறை சாகித்திய மண்டலப் பரிசையும் வேறு பல பரிசுகளையும் ஈட்டிக் கொண்டவர்.

யாழ்.இலக்கிய வட்டத்தின் இயங்கு சக்தியாகத் திகழ்பவர். இலங்கை இலக்கியப் பேரவையின் அமைப்பாளராகச் செயற்பட்டவர். ஈழத்து இலக்கியங்களைத் தேடிக்கண்டுபிடித்து ஆவணப்படுத்துபவர்.

செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் அடையாளப்படுத்தப்பட்டாலும், நீலவண்ணன், விஷ்ணு ஆகிய புனைபெயர்களிலும் ஆரம்ப காலத்தில் சிறுகதை எழுதியிருந்தார்.

''இதயமே அமைதிகொள்'', ''யாழ்ப்பாணத்து இராத்திரிகள்'', ''இரவு நேரப் பயணிகள்'' என்பன இவரது சிறுகதைத் தொகுதிகள் ஆகும். வாடைக்காற்று, காட்டாறு, மரணங்கள் மலிந்த பூமி என்பன இவரது நாவல்களில் ஒருசிலவாகும். ஈழத்தவர் வரலாறு, யாழ்ப்பாணத்து அரச பரம்பரை என்பன இவரது ஆய்வு நூல்கள்.

இவரது 'வாடைக்காற்று' நாவல் திரைப்படமாக வெளிவந்துள்ளது.

'ஈழகேசரி சிறுகதைகள்', 'சுதந்திரன் சிறுகதைகள்' என்ற ஈழத்துச் சிறுகதைத் தொகுதிகளின் தொகுப்பாசிரியர்.

2004 ஆம் ஆண்டில் 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த அவரது 'இழந்த மானுடம்' சிறுகதை இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கின்றது.

# வீட்டின் விளக்காக பெண்களை உயர்த்தி வைத்த தமிழ்ப் புலவர்கள்

ஒரு காலத்தில் புலவர்களுக்கு உரைநடை எழுதுவதை விடக் கவிதை எழுதுவது இலகுவாக இருந்தது. இன்றும் கூட உரைநடை எழுதுவதிலும் பார்க்க வேகமாகக் கவிதை எழுதும் ஆற்றல் வாய்ந்தோர் நம்மத்தியில் வாழ்கிறார்கள். அதற்குக் காரணம் கவிதை ஆற்றினைப் போல் அமைந்திருப்பதே ஆகும். நீந்தத் தெரிந்தவன் ஆற்றில் இறங்கி விட்டால் ஆற்றின் வேகம் அவனை விரைந்து நீந்தத் தூண்டும். அதே போலத்தான் இயல்பில் கவிதை ஆற்றல் வாய்ந்த ஒருவன் மனத்தில் பாடலின் முதல் அடிதோன்றிவிட்டால் மிகுதி அடிகளைப் பாடுமாறு அந்தக் கவிதை அடியே அவனைத் தூண்டும். அவனை இழுத்துச் செல்லும் என்று கூறினும் மிகையாகாது. அந்த நேரத்தில் அவனால் பாடாமல் இருக்க முடியாது.

அரசர் அவையிலும், தெருவிலும், திண்ணையிலும், கிராமத்திலும், நகரத்திலும் என்று பல இடங்களிலும் பல வேளைகளிலும் இயல்பாகக் கவித்துவம் வாய்க்கப் பெற்றோர் பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு. அந்த நேரத்தில் அவர்களுக்குள்ளிருந்து எழுந்த தூண்டுதலினால் பாடாமல் இருக்க முடியாமையினால் அவர்கள் பாடிய பாடல்களில் பெரும்பாலானவை கற்பனைத்தேனில் ஊறிக்கனிந்த கனிகளாகும். அவற்றுள் உதாரணத்துக்கு ஒரு பாடலை நோக்குவோம்.

**ஒளவையார் பாடல்**

'இம்' என்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும் 'அம்' என்றால் ஆயிரமும் பாடும் புலவர் வரிசையைச் சேர்ந்தவர் ஒளவையார். இவருடைய பாடல்கள் அனைத்துமே கற்பனை வளமும், கருத்தாழமும் வாய்ந்தவை. ஒளவையார் பாடலில் பல வெண்பா யாப்பில் அமைந்தவை.

வெண்பாவுக்கு எத்தனையோ தனிச்சிறப்புக்கள் உண்டு. வெண்பாவின் உயிர் நான்கடியிலும் இருந்தாலும் கூட, நான்காவது அடியில் ஈற்றடியில் உயிர்க்குணம் மிகுதியாகத் தோன்றும்.

## வெண்பாவின் கடைசி அடியில் அருங்கருத்துகளை வெளிப்படுத்தும் அவர்களின் திறமையே திறமை!

சிறுவர்கள் குறும்பாகச் சில சமயங்களில் பல்லியின் வாலை வேறாகத் துண்டாடி விடுவார்கள். அந்த நேரத்தில் பல்லி ஓடிவிடும். துண்டாடப்பட்ட பல்லியின் வால் தனித்துக் கிடந்து துடிக்கும். அதில் துடிக்கும் தன்மை புலப்படும்.

வெண்பா என்னும் பல்லியின் வாலும் அதாவது ஈற்றடியும் அத்தகையதே. ஈற்றடி தனித்து நின்றும் உயிர்க்குணம் காட்டும். தனித்து நின்றும் பொருள்தரும்.

ஒளவையாரின் பாடல் ஒன்றில் ஈற்றடி ''பொற்றாலியோடு எவையும்போம்'' என்பதாகும். இந்த ஈற்றடியின் கருத்து பொன்னால் செய்யப்பட்ட தாலியினையுடைய மனைவி இறந்துவிடும் போது ஓர் ஆண்மகனின் எல்லா நலன்களும் நீங்கிவிடும் என்பதாகும்.

**விருந்தோம்பல்**

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்பது திருக்குறள். இல்லறத்தில் இருப்பது எதற்காக என்று கேட்டால் விருந்தோம்புவதற்கு என்கிறார் வள்ளுவர். உரையாசிரியர் பரிமேலழகரோ ''வேறாகாத அன்புடை இருவர் கூடி அல்லது செய்யப்படாமையின்'' என்கிறார். எனவே விருந்தோம்பல் மனைவி இல்லாதவன் செய்யமுடியாத அறமாகும். எனவேதான் ஒளவையார் பொற்றாலி யோடெவையும் போம் என்றார்.

**மங்கல கருமங்கள்**

திருமண வைபவத்தில் முன்னின்று உபசரிக்கவோ, தேங்காய் அடிக்கவோ, அறுகரிசி யிட்டு ஆசீர்வாதம் செய்யவோ மனைவியை இழந்தவன் தகுதியற்றவனாகி விடுகிறான். சமூக அந்தஸ்தில் என்னதான் பெரியவனாக இருந்தாலும் மங்கல கருமங்கள் பலவற்றுக் குத் தகுதி அற்றவனாகி விடுகிறான். எனவேதான் ஒளவையார் சொன்னார் பொற்றாலியோடு எவையும் போம் என்று.



**மனைக்கு விளக்காகிய வாணுதல்**

சங்க இலக்கியத் தொடர் ஒன்று மனைவியை வீட்டின் விளக்கு என்கிறது. விளக்கு அணைந்து விட்டால் வீட்டில் ஒரே இருள்தான். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட வாழ்வில் மனைவி இறந்து விட்டால் கணவனைத் துன்ப இருள் வீட்டில் எதிர்பார்க்கும். தொலைவிடம்சென்றாலும், வேற்றூர் சென்றாலும் வீடு திரும்புமாறு அடிக்கடி தூண்டும் நினைவைத் தருபவள் மனைவியே! எனவேதான் பொற்றாலியோடெவையும்போமென்றார்.

இந்த ஈற்றடியைக்கொண்ட வெண்பாவின் முதல் அடியில் 'தாயோடு அறுசுவையும்போம்' என்றார். தாயை இளம் வயதில் இழந்து பிறர் தயவில் வாழும் சிறுவர்களுக்கு இந்தத் தொடர் மிக எளிதாக விளங்கும்.

'தந்தையோடு கல்விபோம்' என்றார். அதனைத் தொடர்ந்து தந்தை இறக்கும்போது ஒருவன் கல்வி வசதிகளை எல்லாம் இழந்து விடுகிறான். இவ்வாறே இரண்டாம் அடியில் சேயோடுதான் பெற்ற செல்வம் போம்' என்றவர், மூன்றாம் அடியில் 'வாழ்வு உற்றார் உடன்போம்' என்றும், 'உடன் பிறப்பால் தோள்வலிபோம்' என்றும் கூறியவர் இவை எல்லாவற்றிலும் பெரியது, கொடியது மனைவியின் இழப்பு என்பதைக் கூறும் பொருட்டுப்பொற்றாலியோடெவையும் போம் என்றார்.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'' என்ற வள்ளுவரின் குறளின் கருத்தாழத்தைத் தன்பாற்கொண்ட ஒளவையாரின் ஈற்றடியைக் கொண்ட முழுப்பாடல் இது.

*தாயோடு அறுசுவைபோம் தந்தை யொடு கல்விபோம்*
*சேயோடுதான் பெற்ற செல்வம்போம் – ஆயவாழ்வு*
*உற்றார் உடன்போம் உடன் பிறப்பால் தோள்வலிபோம்*
*பொற்றாலியோடெவையும்போம்.*

- நன்றி: தமிழ்ச்செல்வம்.



## மனுக்கொடுக்கப் புறப்படுவோம்

புதினப் பத்திரிகையின்
முகப்புச் செய்திகள்
இதயத்தைச் சிதைக்கிறது
புருவங்கள் நிமிர்ந்து
உதடுகள் பிரிந்து
கண்ணீர் கசிந்து
உள்ளுக்குள்
மௌனமாய் ஆர்ப்பரிக்கிறது.
உறவுகள் உதிர்ந்து
உடலங்கள்
சதைப் பிண்டங்களாக
தெருவோரம் கிடக்கும்
அவலத் தகவல்களால்...
நெஞ்சோரம் குருதி
கொப்பளிக்கிறது.
காந்திதேசமும்
கண்களை இறுக்கி
மூடிநிற்க...
புத்த தேசமும்
மதிகெட்டு நிற்கிறது.
சர்வதேசமும்
அறிக்கைகளோடு
சதிராட்டம் போடுகிறது.
வாருங்கள் - நாம்
புறப்படுவோம் - எம்
உறவுகளைக் காக்க
இறைவனிடம்
மனுக் கொடுக்க....

உமாப்பிரியன்,
சண்டிலிப்பாய்.

## சிறியது என்பதால்...?

உருவம் சிறியது
என்பதனாலே
அலட்சியம் வேண்டாம்!
வடிவம் சிறியது
கொண்டது என்றாலும்
அவதானம் அவசியம்!!

நோய்களை விரைந்து
பரப்பிடும் இலையான்
பெரிய உருவம்
பெற்றதொன்றில்லையே?

நோய்களைக் குணமாக்க
டாக்டர் தருவது
சின்னச் சின்னக்
குளிகைகள்தானே!

உடலுக்கு நலம் பல
தந்திடும் எள்ளுமே
உருவத்தில் பெரியதா?

பயறு உழுந்து மற்றுத்
தானிய வகைகளின்
வீதைகளென்ன
பென்னம் பெரியதா?

எமக்கு நாள்தொறும்
உணவாகும் அரிசியும்
அதனுடன் இரண்டறக்
கலந்துள்ள கற்களும்
பெரிய உருவத்தைப்
பெற்றவையாமோ?

தென்பொதிகை
மலையிலமர்ந்து
செந்தமிழ் வளர்த்த
அகத்திய முனிவரும்
உருவில் சிறியவர்!
அனைவரும் அவரைக்
''குறுமுனி'' என்பர்!

மாவலிச் சக்கிரவர்த்தியிடம்
மூன்றடி நிலம் கேட்டுத்
திருமால் சென்றதும்
குறுவடிவு ஏற்றே.

உயிர்மெய் எழுத்தாம்
''க'' வின் மேலிடும்
சிறுகுற்றதனை
மெய்யெழுத்தாக்குமே!

அரும்பெரும் கருத்ததனை
அள்ளித் தருகின்ற-
உலகப் பொதுமறையாய்
உலகம் போற்றிடும்-
திருக்குறள்......
இருசிறு அடிகளையே
கொண்டுளதன்றோ?

''மூர்த்தி சிறிதென்றாலும்- அதன்
கீர்த்தி பெரிது'' என்றோர்
முதுமொழி உண்டு- அதை
நினைவிலிருத்துவோம்!

உருவத்தில் சிறியதா?
உதாசீனம் செய்யாதீர்!
வடிவத்தில் சிறியதா?
கருத்தூன்றிக் கவனிப்பீர்!!

- முருகு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த மானுடம் ..............

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

''மன்னியுங்கள் ஐயா. பறியரைத் திறந்து உங்களை அங்காலவிட எங்களுக்கு அதிகாரமில்லை.''

''ஆரிட்டக் கதைக்க வேணும்....?''

''அங்க பணிமனையில பொறுப்பாளர் இருக்கிறார். போய்ப் பேசுங்கோ......'' அவன் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினான். அவனைக் கோபத்துடன் ஏறிட்டுவிட்டு நாங்கள் இருவர் அவ்விடத்திற்குச் சென்றோம்.

மேசை லாம்பின் முன் ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். அவனது கரத்தில் வாக்கிரோக்கியோ, மொபைல் தொலைபேசியோ இருந்தது.

''இருங்கோ ஐயா'' என்றான். ''அங்கால இனிப்போக முடியாது. ஐ.சி.ஆர்.சிக்காரர் போயிட்டினம். ஆமி வீதிக்குத் திரைபோட்டு சுருள் கம்பிகளை இழுத்துவிட்டுப் பறியர் போட்டிருப்பினம். போக முடியாது.....''

''நாங்க டீ.எஸ்மார்..... கனபேர் இருக்கிறம். எங்க தங்குறது......?''

''எனக்கு அதிகாரமில்லை. நான் ஒரு தொலைபேசி நம்பர் தாறன். பளைக்குப்பேர்ய் அங்க இருக்கிற தொலைத்தொடர்பு நிலையத்தில பேசிப்பாருங்கோ.''

''ஆற்ற நம்பர்....?''

''ஐ.சி.ஆர்.சியின்ர......''

நாங்க ஏமாற்றத்தோட திரும்பி வந்து வாகனத்தில் ஏறி பளை நகரத்திற்கு வந்தோம். குறித்த இலக்கத்திற்குத் தொர்டர்பு கொண்டபோது அவர் அங்கில்லை எனப் பதில் வந்தது.

''இவங்கள் இப்படித்தான். பொடியள் அலைக்கழிக்கிறான்கள்.'' மீண்டும் பளை பறியரை அடைந்தபோது கச்சேரி வாகனங்கள் வந்திருந்தன. அவற்றிலிருந்து இறங்கி பிரதேச செயலர்கள் நின்றிருந்தனர்.

''அவர் கதைக்கப் போயிருக்கிறார். பொறுப்பாளரை அவருக்குத் தெரியுமாம்.''

'' தெரிஞ்சவர் தெரியாதவர் என்ற கதை பொடியளிடமில்லை.''

இரவு வேகமாகப் பற்றிப் படர்ந்து கொண்டிருந்தது. சென்றவர் திரும்பி வந்தார். முகத்தில் வாட்டம் தெரிந்தது.

''சரிவராது போலவிருக்கு. நிற்கட்டாம்.''

''எங்க நிற்கிறதாம்?''

''வாகனத்தில் விடியும்வரை இருப்பம். அல்லது எங்காவது இங்கத்த லொச்சுகளுக்குப் போவம்.''

''இவங்கள் செய்யிறது கொஞ்சமும் நல்லாயில்லை. இப்படிப் பதினான்குபேரை மறிச்சு...... போக விட்டிருக்கலாம்.''

எல்லோரும் சலித்துக் கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் நிகழவிருந்த உறவினரின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள வந்த ஒரு குடும்பம் ஓட்டோ ஒன்றில் வந்திறங்கியது. ஒரு பெண் நிலத்தில் உட்கார்ந்து அழத் தொடங்கினாள். ''அக்கா, கடைசி உன்ர சவத்திலாவது முழிப்பனா?''

''கடைசியாகக் கேட்டுவாறன். எப்படியாவது விடும்படி...... இல்லாவிட்டால் மருதங்கேணிக்காவது போய்த்தங்க வழிப்பாசை மாற்றித் தரும்படி....'' நான் மீண்டும் அவர்களின் பணிமனைக்குச் சென்றேன். பொறுப்பாளர் இருக்கவில்லை. வேறொரு இளைஞன் இருந்தான்.

''அவர் வெளியில போட்டார். உங்கட விடயமாகப் பேசத்தான். ஐ.சி.ஆர்.சியோட இல்லாவிட்டால் ஆமியோட பேசி ஏதாவது ஒழுங்கு செய்ய....''

முகம் வாட நின்றோம்.

''ஏமாத்திறான்கள். உது சரிவராது. நீங்க வாங்க. இந்தப் பனிகொட்டும் ராவில வெங்கணாந்தி வெளியில இனிக் காலமை பறியர் திறக்கும்வரை நிக்க வேண்டியதுதான்.''

''என்ன தம்பி செய்யிறது?''

''போய்க் கொஞ்சம் பொறுமையாக இருங்க ஐயா. சிலவேளை சரிவரும்.''

எங்களுக்கு நம்பிக்கை வரவில்லை. எல்லாரையும் மனத்திற்குள் திட்டித் தீர்த்தபடி திரும்பி வந்தோம்.

வானம் சற்றுத் தெளிவாகவிருந்தது. இறைந்து கிடந்த நட்சத்திரங்கள் பிரகாசமாகப் புலப்பட்டன. குளிர்காற்று உடலைத்தழுவி அலுப்பைத் தந்தது. அப்போதே மருதங்கேணிக்குப் போய்த் தங்கியிருக்கலாம். பசிவேறு தன் இருப்பினைக் காட்டத் தொடங்கியது. அவசரம் அவசரமாக மதியம் சாப்பிட்டது, விரைந்துவரும் அவசரத்தில் இடையில் எங்கும் வாகனத்தினை நிறுத்தித் தேனீர்கூடக் குடிக்கவில்லை.

என்ன வாழ்க்கை?

பளைத் தடைமுகாமில் இரண்டு இளைஞர்கள் காவல் இருந்தனர். அவர்கள் எங்களைப்பற்றி எதுவிதமான அக்கறையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. பார்சல்களைப் பிரித்து இரவுணவைச் சாப்பிடத் தொடங்கினர்.

சயிக்கிள்களில் போராளிகள் இருவர் வந்தபோது அவசரமாக எழுந்து பறியர் துலாவை உயர்த்திவிட்டனர்.

''உவங்கள் அங்கால போகலாமோ?''

''உதென்ன விசர்க்கேள்வி?''

இருளை ஊடுருவிக் கொண்டு ரோச் வெளிச்சம் பணிமனைப் பக்கமிருந்து எங்களை நோக்கி வந்தது. யாரோ வருகிறார்கள்.

''ஆரோ வருகினம். எல்லாவிடமும் தொடர்புகொண்டு பார்த்தம். தொடர்பு கிடைக்கவில்லை. என்ன செய்யிறது ஐயா என்று சாட்டுச் சொல்லப்போகினம்.''

பொறுப்பாளர் எங்களிடம் வந்தான்.

''கொஞ்சம் பொறுத்திருங்கோ. சரிவரும்போல இருக்குது. ஐ.சி.ஆர்.சியோட தொடர்புகொள்ள முடியவில்லை. முகமாலைக் கப்ரின் ஒருவரோடு தொடர்பு கொண்டிருக்கிறம். பார்ப்பம்.... ஐயா'' என்ற அந்த இளைஞனை அவநம்பிக்கையோடு பார்த்தோம். எங்களைத் திருப்திப்படுத்த முயல்கின்றானோ? நேரம் கழித்து வந்துவிட்டு அவர்களை ஏன் நாம்குறை சொல்வான் எனவும் மனதில் பட்டது.

''நான் சொன்னன் அப்படியே சொல்லிப்போட்டினம். இனி ஒருக்காத் திரும்பிவந்து சொல்லுவினம் அது சரிவரவில்லை எண்டு. எனக்குத் தெரியும். ஏதோ கரிசனையாக எங்களுக்காகக் கஷ்டப்படுகிறதாகக் காட்டுகினம்.''

சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞன் சாப்பாட்டை மூடிவைத்துவிட்டு எங்களிடம் ஓடி வந்தான். அவன் கரத்திலிருந்த வாக்கிரோக்கி சிணுங்கியது.

''நீங்கள் போகலாம் ஐயா.''

வீதிக்குக் குறுக்கே இருந்த பறியர் துலா உயர்த்தப்பட்டது. எங்கள் பலரின் தலை கவிழ்ந்து கொண்டது. அவர்கள் எங்களை அணாப்பவில்லை. எங்களை அங்கால அனுப்பிவைக்க இவ்வளவு நேரமாக முயன்றிருக்கிறார்கள்.

வாகனங்கள் பறியரைக் கடக்கும்போது அந்த இளைஞன் சொன்னான்: ''முகமாலை வன்னிப்பக்கத் தடைமுகாமை நெருங்கும்போது வாகனத்தின் கூட் லைற்றுக்களைப்போட்டு உங்களை அடையாளங் காட்டுங்கோ. அங்கால சூனியப் பிரதேசத்தைக் கடந்து ஆமிப்பொயின்ரை அடையும்வரை லைற் இருக்கட்டும். ஏலுமெண்டால் செத்த வீட்டிற்கு வந்து தவிக்கிற அந்த மூன்று பேரையும் ஏத்திப் போங்கோ..... அங்கால சொல்லுறம்.''

நாங்கள் புலிகளின் தடைமுகாமை நெருங்கியபோது காவலிலிருந்த அந்த இளம் பெண்பிள்ளைகள் எங்களை வழிமறித்தார்கள். இந்த நள்ளிரவில் என் மகள், பேரப்பிள்ளைகள் ஒத்த வயதினர். படுத்து[illegible]ங்க வேண்டிய [illegible]வளையில் இங்[illegible] காவலிருக்கின்ற அவர்களைப் பார்த்ததும் மனம் கனத்துக் கொண்டது. அந்த உணர்வினை என்னால் விவரிக்க முடியவில்லை. நாங்கள் என்ன வென்னவெல்லாம் பேசிக்கொண்டோம்?

''வணக்கம் ஐயா. நீங்க எத்தனைபேர்?'' என்று வாகனத்தை நெருங்கிய போராளிப் பெண் கேட்டாள்.

''எல்லாருமா பதினான்கு பேர்''.

வாகனங்களைப் பார்வையிட அப்பெண் திரும்பி வந்தாள்.

''பயணிகள் மூவர் வருவதாக அறிவிச்சினம் ஐயா''

''பிரச்சினை வரலாமென்று அவர்களை ஏத்திவரவில்லை''

அவள் எங்களை ஏறிட்டுப் பார்த்தாள். அப்பார்வையின் காங்கை எங்களைச் சுட்டது. மீண்டும் தலை குனிந்தது.

''சரி ஐயா நீங்க போகலாம்'' மனம் கனக்கத் தொடங்கியது. சூனியப்பிரதேசத்தினைக் கடந்து இராணுவச் சென்றியை அடைந்தோம். வீதிக்குக் குறுக்கே திரைச்சேலை இழுத்து மறைக்கப்பட்டு முட்கம்பிச்சுருள் போடப்பட்டிருந்தது.

வாகனங்களைக் கண்டதும் துப்பாக்கிகளை ஏந்திய இளம் இராணுவ வீரர்கள் முன்னால் வெளிப்பட்டனர். எங்களைப் பார்வையிட்ட பின்னர் ''பசெஞ்சர் மூணுபேர் வாறதாகச் சொன்னது எல்ரிரி....... அவங்க எங்க?'' என்று கப்ரின் தரத்திலான இராணுவ வீரன் அதே கேள்வியைக் கேட்டான்.

மனம் கனக்கத் தொடங்கியது.****

*நன்றி: நமது ஈழநாடு - 2004.*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 47

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| ■ | 9 | | | | | ■ | |
| 10 | ■ | | ■ | 11 | | | ■ |
| 12 | 13 | ■ | 14 | | | ■ | 15 |
| 16 | | 17 | | | ■ | 18 | |
| | ■ | 19 | | ■ | 20 | | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### மேலிருந்து கீழ்

1. ஒரு நாட்டவர் பிற நாடுகளுக்குச் செல்வதற்கு இதைப் பெற வேண்டும்.
2. இஸ்லாமியர்கள் அதற்குரிய காலத்தில் கடைப்பிடிப்பது.
3. கட்டுப்பாடின்றி அலைபவன்.
4. ஆண்-பெண், ஒருவர் மீது மற்றவரு க்கு இருப்பது.
5. போன்று.
6. இங்கு நடந்த சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில்முடிவடைந்தன.
8. இறைவனின் பிறப்பு.
10. ஐந்து வகைப் பாக்களில் ஒன்று.
13. தலையில் எழுதப்பட்டது.
14. பிடிவாதம்.
15. மறு/காயத்தின் அடையாளம்.
17. நோய்.
18. ஒருமைத்துவம்.
20. பாத்திரம்/கலம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 45 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) வாசகன் (4) தகுதி (7) தளிர் (8) அசைக்க (9)மதுரை(11)கதி (12)தவிர்த்தல் (14)அன்னை (15) தலை (17)வளை (18)பல்விதம் (20)சக (21)திரி (22) சாத்திரம் (23) சுறா

**மேலிருந்து கீழ்**

(1) வாதம் (2) சளி (3) கர்மவினை (4) தசை (5)குக்கல் (6)திகதி (8) அரைத்தல் (10)துர் (12) தன்னை (13) தலைவிதி (14) அவச்சா (16)ராம் (18)பகர (19)தரிசு (20)சதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:45 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந் தெடுக்கப் பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** செல்வராசா செல்வறஜீவன்,
இல.35/5, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** தீ.தூவமலர்,
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**3 ஆம் பரிசு** செல்வி நந்திகா கந்தையா,
'இந்திரகிரி',வதிரி,
கரவெட்டி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 47
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,
இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (18.02.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 47 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 22.02.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. வித்தியாசமானது; ஆச்சரியம் தருவது.
4. கண் தெரியாதவன்.
7. ஆதாரம்.
8. ஈழத் தமிழர் வாழ்வு இன்று இது நிறைந்தது.
9. ஆண் பிள்ளைகள்.
11. தேசிய விளையாட்டுக்களில் ஒன்று. சமையலுக்கு உதவும் பாத்திரமும்கூட.
12. புலவன்; அவன் பாடுவது; குரங்கையும் குறிக்கும்.
14. முடியாட்சியின் தலைவி.
16. வாழும் இடம்.
18. ஆறுக்குப் பிந்தியது. எட்டுக்கு முந்தியது.
19. நாங்கள்.
20. விடாய்.
21. பாட்டுக்கொரு புலவன்.
22. திரவத்துக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பது.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வி [illegible]
முத்துமாரி அம்மன் கோயிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(2) கு.சண்முகரத்தினம்,
பாரதி லேன்,
சங்கானை.

(3) கோபிகா பரிமளகாந்தன்,
இல.422, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(4) சி.பாலசுந்தரம்,
பிள்ளையார் கோயில் வீதி,
கல்வளை, சண்டிலிப்பாய்.

(5) ம.தில்லைநாதன்,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்வு



*எமது மக்கள் வங்கி நெல்லியடிக் கிளை பிரதி முகாமையாளர் தருமலிங்கம் தருமரத்தினம் அவர்களின் அன்புத் தாய்*

### திருமதி தருமலிங்கம் பொன்னம்மா

அவர்கள் கடந்த 06.01.2009 அன்று அமரத்துவம் அடைந்தமையையிட்டு எமது துயரத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமையாளர், ஊழியர்கள்,**
**மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை.**

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை வேலாயுதபிள்ளை



*(முன்னாள் நிதிப்பணிப்பாளர், இ.போ.ச.)*

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, வேப்பங்குளத்தை வசிப்பிடமாக வும் கொண்ட தம்பிப்பிள்ளை வேலாயுதபிள்ளை நேற்று முன்தினம் (06.02.2009) வெள்ளிக் கிழமை மீசாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (ராசர்) மற்றும் மாணிக்கம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும். காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னமுத்துவின் (முன்னாள் கணக்காளர், பொலிஸ் திணைக்களம்) பாசமிகு கணவனும் விஜயலட்சுமி, விஜயராணி (தாதிய உத்தியோகஸ்தர், யாழ். போதனா வைத்தியசாலை), விஜயராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தம்பிராசா (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்), யூஜின் (முன்னாள் விவசாயத் திணைக்கள உத்தியோகஸ்தர்), சியாமளா (பேபி-கனடா), சிங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்ரன் பிரசாந் (கனடா), உயர் தொழில் நுட்பக்கல்லூரி மாணவிகளான வித்தியா, தர்சிகா, சுனிதா (A/L வேம்படி ம.கல்லூரி),எரிக் பிரதாப், ராகவன், வித்தகன், ஜகானா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிசாந்தன்(கனடா), நிதர்சன் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*ராமாவில், கொடிகாமம்.*

**தகவல்:**
**யூஜின் (மைத்துனர்)**

### தம்பிஜயா பெஞ்சமின் தவராசா *(ஓய்வு பெற்ற ஓவசியர், A.M.C)*



கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா பெஞ்சமின் தவராசா 06.02.2009 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா-செல்வநாயகி அம்மா தம்பதியினரின் அருமைப் புதல்வனும் கலஞ்சென்ற ஐயாமுத்து-பங்கையர் செல்வம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சீதாதேவியின் பாசமிகு கணவரும் சுஜந்தன் (சவுதி), வசந்தன் (உரிமையாளர்-பிரியங்கா புத்தகசாலை, பருத்தித்துறை), சுஜந்தினி, வசந்தினி (மாணவி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணானந்தராஜா, இராஜசோதி, இராஜேஸ்வரி, இராசஞானம், இன்பராஜா, ஜீவராஜா, ராஜமனோகரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இந்திராதேவி, பாலேந்திரா, திருமதிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் இன்று (08.02.2009)ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இராஜஸ்தான்,*
*கற்கோவளம், பருத்தித்துறை.*
*தொ.பே: 0779303246*

*தகவல்:*
*வசந்தன் (மகன்)*

### முத்தையா கயிலாயபிள்ளை



அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கயிலாயபிள்ளை நேற்று (07.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-செல்லாச்சி தம்பதியரின் ஏக புதல்வனும் நாகலிங்கம்-நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பாக்கியலீலாவின் அன்புக் கணவரும் சுகந்தினி (ஜேர்மனி), மதுரவசனி (ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), சுதர்சினி, சுபாஸ்கரன்(கொழும்பு) ஆகியோரின் அன்பு அப்பாவும், சதாநந்தன்(ஜேர்மனி), முரளிதரன்(கிராம்புவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சமேரா, காரணிகா, ஜதுரன், சஜிவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் கனகம்மா மற்றும் கமலாம்பிகை, சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியரத்தினம், நாகராஜா (கொழும்பு), புஸ்பராஜேஸ்வரி(ஜேர்மனி), சிவராசா, செல்வராஜா(லண்டன்), பவதீஸ்வரி ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லாரை வடக்கு,*
*மீசாலை.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## தைப்பூச நிகழ்வுகள்

சுழிபுரம்,பெப்.8

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் கோயில், பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் தைப்பூசத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

முத்துமாரி அம்பாள் கோயிலில் காலை 8 மணிக்கும், முருகமூர்த்தி கோயிலில் பிற்பகல் 4மணிக்கும் இந்தத் திருவிழா ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றையதினம் விசேட அபிசேக, ஆராதனைகள் நடைபெற்று, சுவாமி வீதியுலா வருதலும் நடை பெறும். (204-28)

* * *

யாழ்ப்பாணம், பெப்.8

சாவகச்சேரி நகர்ப் பிரிவு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தைப்பூச விழா இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பரா மரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவி திருமதி லோ.நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் செ.உமாபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பிரதேசத்தில் உள்ள அனைத்து மகளிர் அபி விருத்திச் சங்கங்களும் தைப்பூச விழா நடத்த மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினர் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (204-207)

* * *

யாழ்ப்பாணம், பெப்.8

சண்டிலிப்பாய் கல்வளை வீதி எனும் முகவரியில் அமைந்துள்ள காளிஅம்பாள் ஆலயத்தில் தைப்பூசத்தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம், பெப்.8

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நிகழ்வு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு கந்த புராணப்படிப்பும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், பெப்.8

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்துக்கான தீர்த்தக் கேணி அமைக்கும் ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை தைப்பூச தினத்தன்று காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் முன்னாள் பரிபாலன சபைத்தலைவர் திருமதி ஆனந்தன் மீனாம்பிகை, மற்றும் திருமதி சத்தியநாதன் அரியமலர் குடும்பத்தினரின் நன்கொடை உதவியுடன் மேற்படி ஆலய தீர்த்தக்கேணி அமைக்கப்படவுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம் பெப்.8

நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலய தைப்பூசத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலய முன்மண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம், பெப்.8

நீர்வேலி கந்தசுவாமி ஆலய தைப்பூசத் திருவிழா இன்று நடைபெற வுள்ளது.

விசேட அபிசேக ஆராதனைகள் இடம் பெற்று நண்பகல் மகேஸ்வர பூசை நடைபெறும்.

பிற்பகல் 4 மணிக்கு மஞ்சத்தில் சுவாமி வீதியுலா வருவார். (224)

* * *

யாழ்ப்பாணம், பெப்.8

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகண சுவாமி கோயிலில் கைலாச வாகன வெள்ளோட்டவிழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்று மாலை 4 மணியளவில் விநாயகர், சுப்பிரமணிய சுவாமி சகிதம் கைலாச வாகனத்தில் திரு வீதியுலா வருங் காட்சி இடம்பெறும். (1)


## ஏகாதச ருத்திர மஹா ஹோமம்

வடமராட்சி பருத்தித்துறை முதல்வி அம்மன் ஆலயத் தில் நாளை (09.02.2009) திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் 12 மணிவரை நடைபெறும். அனைவரும் வருக

பிரதமகுரு தாணு - வாகதேவ சிவாச்சாரியருடன் 15 சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

சுபம்.

பருத்தித்துறை.

முதல்வி அம்மன் கோயில்,
ஞானசம்பந்தர் கலை மன்றம்.



*யாழ்ப்பாணம் - கோட்டை*

## அருள்மிகு முனீஸ்வரர் தேவஸ்தான தைப்பூசத் திருவிழா - 2009

முனீஸ்வர மெய்யடியார்களே!

நிகழும் சர்வதாரி வருடம் தைமாதம் ஞாயிற்றுக்கிழமை 26 ஆம் நாள் இன்று (08.02.2009) முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வரபூசை (அன்னதானம்) நடைபெறும். அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு அருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம.

**யாழ். சிறைச்சாலை அத்தியட்சகரும், உத்தியோகத்தர்களும்.**



*சிறி முத்துமாரியம்மன் துணை*

## வாரிவளம் சிறி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், சாவகச்சேரி

***வன்னி மக்களின் அவலம் நீங்கி சமாதானம் வேண்டி இன்று (08.02.2009) ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் செவ்வாய் வரையும் தினமும் காலை 6 மணி தொடக்கும் மாலை 6 மணிவரையும் பிரார்த்தனைகள் திருவாசகம் முற்றோதுதல், வழிபாடுகள், அபிஷேக ஆராதனைகள் என்பன இடம்பெற இருப்பதனால் அனைவரும் வருகை தந்து ஆராதனைகளில் கலந்து பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

*வைத்தியலிங்கம் சிவராசா (திருப்பணியாளர்)*
*- த.வீரபத்திரக் குருக்கள் (ஆலய குரு)*



## வேலைக்கு ஆள் தேவை

கணனியில் அனுபவமும் தேர்ச்சியுமுள்ள பெண் வேலையாள் தேவை. பழகவிரும்புபவர்களும் நேரில் வரலாம். உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குள் வசிப்போர் விரும்பத்தக்கது.

**தொடர்புகொள்ளவேண்டிய நேரம்:**

**இன்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை**
காலை 10.00 - 12.00 மணிவரை
**நாளை (09.02.2009) திங்கட்கிழமை**
காலை 9.00 - 12.00 மணிவரை
**நாளை மறுதினம் (10.02.2009) செவ்வாய்க்கிழமை**
காலை 9.00 - 12.00 மணிவரை

தொடர்புகளுக்கு: உரிமையாளர், அபிஷேக் மல்ரி ஸ்பொட், இராமநாதன் கல்லூரி முன்பாக,கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம்.

*தொலைபேசி: 0718563540, 0779005856*
*தொலைபேசி:0214591899, 0772230535.*


## மரண அறிவித்தல்

### விநாயகபாலன் சறோஜினிதேவி



சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயக பாலன் சறோஜினிதேவி நேற்று முன்தினம் (06.02.2009) வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி கேசு - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விநாயகபாலனின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியம், சிவபாலன், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யாழினி, வினுதா, ஜனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் யுதாகரனின் (அகிலன்) அன்பு மாமியாரும் ஆவார். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சூழலுக்குகந்ததும், உணவு வசதியுடனும் மாணவிகளுக்கான தங்குமிட வசதி

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு
முன்பாக உள்ளது.
உடன் பதிவு செய்யலாம்.

5/6, கோணாவளை வீதி, கொக்குவில்.

(82510)


சிவமயம்

## வண்ணை கோம்பயன்மணல் இந்துமயான பரிபாலன சபை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 15.02.2009 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3 மணி

இடம்: அறிவொளி சனசமூக நிலையம்,
ஆறுகால்மடம்

நிகழ்ச்சிநிரல்:
1) தேவாரம் 2) அறிக்கைகள் 3) தலைமையுரை
4) புதிய நிர்வாகிகள் தெரிவு 5) பிறவிடயங்கள்

* கூட்டத்திற்கு உரிய நேரத்தில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.
* புதிய உறுப்பினர்களாக இணையவிரும்புபவர்கள் செயலாளரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கலாநிதி க.குணராசா — தலைவர். (82487) இரா.செல்வவடிவேல் — செயலாளர்.

## ஈரவிழிகளில் பதினான்காண்டுகள்

அன்னை மடியில் 05 * 04 * 1926



ஆண்டவன் திருவடியில் 15 * 01 * 1995

### அமரர் ஏரம்பு சோதிலிங்கம் (மண்டைதீவு - 08)

திதி: பூர்வபக்க சதுர்த்தசி (08.02.2009)

அன்பின் சிகரமே! ஆற்றலின் உறைவிடமே!
பண்பின் இருப்பிடமே பாசத்தின் நிறைகுடமே
நீதியின் காவலனே வீரத்தின் விளைநிலமே
பார்புகழும் உத்தமனே குலம் சிறக்க வந்துதித்தவனே
குடும்பத்தின் குலவிளக்கே உயர்வுக்காக அர்ப்பணித்தவனே
பதின்நான்கு ஆண்டுகள் என்ன பதின் நான்காயிரம் ஆண்டுகள் ஆனாலும்
மாறுமோ எம் துயர் மறையுமோ உம் நினைவு.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(82505)

இல.2/2. முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஆறாத்துயரில் நீந்தும்:
அருமை மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரி, மைத்துனர்.

## தசாப்த நினைவலைகள்...



மலர்வு 24 * 04 * 1933

உதிர்வு 30 * 01 * 1999

### அமரர் இளையதம்பி தர்மராசா

திதி: 08.02.2009

இருவினையில் மானிடரினில் - வாழ்வு
ஈரேழுலகமது தொடர்ந்திடினும்
தர்மராசா வெனும் நாமமுடன் - பாரினிலே
தர்மத்தின் அடியொற்றியெமை ஏற்றிவைத்தீர்

பரமனடியேகிப் பத்தாண்டாகிடினும் - உம்
பாதச் சுவடுகளை பாரினிலே நாம் பற்ற
பரமனருகிருந்து பகலவனாயிருள் - அகற்றி
ஒளியேற்றி வருகின்றீர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

58/1, சிவன் புதுவீதி,
நல்லூர். (82343) மனைவி, பிள்ளைகள்.

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.8

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டு வரும் தச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் மானிப்பாய் ஒவஸ்ரோம் விளையாட்டுக் கழகமும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.(86)

* * *

வலி.வடக்கு,பெப்.8

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (86-112)

### வதிரி தமிழ் மன்ற கட்டடங்கள் திறப்பு

கரவெட்டி, பெப்.8

வதிரி தமிழ் மன்றத்தில் யு.என்.எச்.சி.ஆர், சொலிடார் நிறுவனங்களின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

மன்றத் தலைவர் சி.க.இராசேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார்.

(203-70)


## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.


## 60 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் மகிழ்வு 08.06.1961



விண்ணில் சங்கமம் 10.12.2008

### அமரர் கந்தையா யோகரத்தினம் (சின்னத்தம்பி)

ஆயிரம் உறவிருந்தென்ன
ஆனை கட்டி வாழ்ந்தென்ன
தங்களின் அன்புக்கும் உறவுக்கும்
அவையெல்லாம் ஈடாகுமோ?

ஆல்போல் விழுதுவிட்டு
அறுகு போல் வேரூன்றி
ஆண்டுகள் பல வாழ்வீர் என
ஆவலுடன் காத்திருந்தோம்
ஆசையுடன் பார்த்திருந்தோம்!

பெற்ற பிள்ளைகள் கதறி நிற்க
கட்டிய மனைவி கலங்கி நிற்க
பாச உறவுகள் விழித்து நிற்க
பாரினிலே எமைத் தவிக்கவிட்டு
பாதி வயதினிலே
பரமனடி சேர்ந்தீரே!
நெஞ்சக் கனவை இறைவனடி
சமர்ப்பித்து
நின் ஆத்மா சாந்தி பெற
இறைஞ்சுகின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு. (சி/557080)

நெஞ்சம் கனத்த நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவுத் துளிகள்

காலத்தால் அழியாத ஒளிவிளக்கு

### அமரர் செல்லத்துரை இரத்தினராசா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகார சபை)
(MANAGING DIRECTOR - RATNA GROUPS & COMPANY)



தோற்றம்: 24.04.1942
மறைவு: 12.02.2006

அன்புள்ள அப்பாவே
ஆயிரம் கனவுகளுடன் - எம்மை
வளர்த்தீர்கள் அப்பா
கனவுகளை நனவாக்கி நிற்கின்றோம்
கண்டுகளிக்க வருவீர்களா? மறுபடியும்
கண்ணீருடன் கண்கலங்கி காத்து நிற்கின்றோம்
வருடங்கள் மூன்று ஓடி மறைந்தபோதும்
அப்பா நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும்
எமது இதயங்களில் என்றும்
எம்முடன் தான் இருக்கிறீர்கள்
பாசமுடன் இணைந்து பண்புடனே
வாழ்ந்தீரே அப்பா
மறக்கத்தான் முடியவில்லை
கலங்குகிறோம் நாம் இங்கு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உயிர் உருகி அஞ்சலிக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (82501)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சொல்லை விட்டு செயலில் செய்து காட்ட வேண்டிய தமிழக முதல்வர்

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பார்கள். அதுபோல ஈழத் தமிழருக்கு ஆதரவாகத் தாம் முழு அளவில் செயற்படுகின்றார் என்பதைத் தமிழ் மக்களுக்குக் காட்டுவதற்குத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஒரு சாட்சியை அழைத்திருக்கின்றார்.

ஈழத் தமிழர்களின் தந்தை என்று போற்றப்படும் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மகனான சந்திரகாசனையே அவர் தமது ஈழத் தமிழர் ஆதரவுப் பணிக்கு நற்சான்றிதழ் வழங்கும் பெரியவராக முன்னிலைப்படுத்தியிருக்கின்றார்.

''தாங்கள் ஆட்சியில் இருப்பதால்தான் இலங்கைச் சிங்கள அரசு ஓரளவுக்கேனும் அடக்கி வாசிக்கின்றது. உலகத் தமிழர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட முடிகின்றது''- என்று தமக்கு சந்திரகாசன் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார் எனத் தெரிவித்து, தமது பணிச் சிறப்புக்கு ஆதாரம் தர முயல்கிறார் தமிழக முதல்வர்.

இடம்பெயர்ந்த ஈழத் தமிழ் அகதிகளுக்காக இந்தியாவில் சந்திரகாசன் ஆற்றும் சேவை மதிப்புக்குரியது. ஆனால் ஈழத் தமிழர் உரிமைப் போராட்ட வழித்தடத்தில் தந்தை செல்வா போன்று விதந்துரைக்கப்பட்டவர் அல்லர் சந்திரகாசன் . ஆகவே, இவ்விடயத்தில் சந்திரகாசனின் கடித வாசகங்களைத் தமிழக முதல்வர் முன்னிறுத்துகின்றமை 'வேலிக்கு ஓணான் சாட்சியாம்' என்பது போன்றதுதான்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்திகளை வெளிப்படையாகவே கடுமையாக எதிர்க்கும் ஜெயலிதா போன்றோர் இன்று தமிழக முதல்வர் கதிரையில் அமர்ந்திருந்தால், கொழும்பின் இன அழிப்பு நடவடிக்கைக்கு அது ஊக்கமளிப்பதாக இருந்திருக்கும் என்று ஊகிப்பதில் தப்பில்லை.

ஆனால், உலகத் தமிழினத்தின் தலைவர் என்ற மகுடத்தைத் தமக்குத் தாமே சூட்டியுள்ள கலைஞர் கருணாநிதியிடம் தமிழக மக்கள் தமது ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கையில், ஈழத் தமிழினத்துக்காக ஆற்ற வேண்டிய தமது கடப்பாடுகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றாமல் தப்புவதற்கு, இந்தப் பதவியில் வேறுயாரும் இருந்திருந்தால் இந்தளவுக்குச் செய்திருக்கமாட்டார்கள் என்று விளக்கம்- வியாக்கியானம்-கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல; அது நியாயமும் அல்ல.

இலங்கையில் சிங்களத்தின் இராணுவ வெறித் தீவிரத்தில் பேரவலப்பட்டு நிற்கும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதில் தமிழகம் ஒன்றுபடவில்லையே என்று குறிப்பிட்டு அதற்காக இன்று நீலிக் கண்ணீர் வடிக்கும் தமிழக முதல்வர்-

அந்த ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து ஆற்ற வேண்டிய தமது கடப்பாட்டை-அரசியல் சுயலாப சிந்தனைகள் காரணமாக-நிறைவு செய்யாமல், அடக்கி வாசித்துக் கொண்டு, அந்த ஈழத் தமிழர்கள் தமக்குள் முரண்படாமல் ஒற்றுமைப்பட்டுப் போராடியிருந்தால் இந்த நிலைமை இன்று வந்திருக்காது என்று அடிக்கடி குதர்க்கம் செய்ய முயல்வது அபத்தமாகும்.

ஜெயலலிதாவின் அ.தி.மு.க.கூட்டணியில் முக்கிய கட்சியாக உள்ளது வைகோவின் ம.தி.மு.கழகம். ஆனால் ஈழத் தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதாவின் பாதையைத் துறந்து நியாயத்தின் பக்கம் நிற்கின்றார் வைகோ.

அதுபோலவே, டாக்டர் இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும் இந்திய மத்திய அரசுக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றது. ஆனால் ஈழத் தமிழர் விவகாரத்தில் அக்கட்சி மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு வெளியில் வந்து தனது பக்கக் கருத்தை- நியாயத்தை- வெளிப்படையாக உரைத்து உணர்த்திச் செயற்படுகின்றது.

அந்த வகையில் தாமும் ஈழத்தமிழர்களுக்காக உள சுத்தியோடும், நியாயத்தோடும் செயற்படுகின்றாரா, தமது கட்சியான தி.மு.கவையும், தமது தலைமையிலான தமிழக அரசையும் இவ்விடயத்தில் நீதியான வழியில் நெறிப்படுத்துகின்றாரா என்பன போன்ற கேள்விகளைத் தமிழக முதல்வர் கருணாநிதி தமது மனச்சாட்சியைத் தொட்டுத் தாமே எழுப்பவேண்டும்.

உண்ணாவிரதங்கள், வழி மறிப்புகள், ஆர்ப்பாட்டங்கள், மனிதச் சங்கிலிப் போராட்டங்கள் போன்றவை தமிழக மக்களின் உணர்வு நிலைப்பாட்டை வெளிப்படுத்தக் கூடியவைதான். அதிகாரத்தில் இல்லாத தரப்புகள், மக்களின் கருத்தை ஆட்சியாளர்களுக்கும் உலகுக்கும் எடுத்தியம்ப இந்தப் போராட்ட வடிவங்கள் நன்கு உதவும். ஆனால் ஆட்சியில் இருப்போருக்கு இதற்கு அப்பாலும் நடவடிக்கைகளை எடுக்க அதிகாரங்கள், வழிமுறைகள் உள்ளன என்பதை நாம் தமிழக முதல்வருக்குச் சுட்டிக் காட்டித்தான் அவருக்குத் தெரியவேண்டும் என்பதல்ல.

பேரழிவில் சிக்கி நிற்கும் ஈழத் தமிழர்களின் விடயத்தில் இந்திய மத்திய அரசு மெத்தனமாக மட்டும் இருக்கவில்லை. ஈழத் தமிழர் தலையில் 'மொத்தென' போடுவதற்கு கொழும்புடன் சேர்ந்தும் பணியாற்றுகின்றது என்பதும் பரகசியம்.

அத்தகைய இந்திய மத்திய அரசை அசரவைக்கும்- அதிரவைக்கும்-வலுவுடன்தான் தமிழக முதல்வர் இன்று உள்ளார் என்பதும் தெரிந்த ஒன்றே.

அதனைச் சரிவர முன்னெடுப்பதற்கான ஆதரவைத் திரட்டி, விடயங்களை நகர்த்துவது அவரின் இலக்காக இருக்க வேண்டும்.

இவ்விடயத்தில் தமிழகத்தில் உள்ள நிழல்களோடு பொருதுவதை விடுத்து, புதுடில்லியில் உள்ள நிஜத்தோடு மோத அவர் முன்வர வேண்டும். நடிப்பை விடுத்து துடிப்போடு செயற்பட கலைஞர் முன்வருவாரானால் இவ்விட யத்தில் உரியதை சாதிப்பது அவருக்கு ஒன்றும் கஷ்டமான விடயமே அல்ல.

ஈழத் தமிழர்கள் சார்பில் கலைஞரிடம் ஒரு பணிவான வேண்டுகோள்!

அழிந்து வரும் ஈழத் தமிழினத்தைத் தூக்கி நிறுத்தி, அவர்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுத்திட தங்களுக்குக் கிடைத்திருக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பம் இது. இந்த வாய்ப்பைச் சரியாக பயன்படுத்தி உலகத் தமிழினத்தின் தலைவராக உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள். அல்லது சரித்திரம் தந்த சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு ஈழத் தமிழினத்தை நட்டாற்றில் தவிக்க விட்ட தவறுக்காக வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் உங்கள் பெயர் வீசப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

# மோதல்கள் உக்கிரமடைந்து வருவதனால் வன்னி நிலைமை நாளுக்கு நாள் மோசமடைகிறது

## செஞ்சிலுவைச் குழுவின் பேச்சாளர் தகவல்

அரசாங்கப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் மோதல்கள் உக்கிரமடைந்து வருவதால் வன்னிச் சிவிலியன்களது நிலைமை நாளுக்கு நாள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரசி விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

வன்னிச் சிவிலியன்கள் மிகவும் இக்கட்டான மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலிருந்து இடம் நகர்த்தப்பட்ட நோயாளிகள் முல்லைத்தீவு புதுமட்டுலாம் பகுதியில் அடைக்கலம் பெற்றுள்ளனர். குறித்த பிரதேசத்தில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு சுகாதார அமைச்சு அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர்களும் இணைந்து சிறந்த சேவையாற்றி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். புதுமட்டுலாம் பிரதேசத்தில் சுத்தமான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலவுவதாகச் சரசி விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

நோயாளிகளைப் பாதுகாப்பாக இடம் நகர்த்தவும், மனிதாபிமான நிவாரணப் பொருள்களை விநியோகம் செய்யவும் பாதுகாப்பான பாதை உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். க்டந்த வாரம் முதல் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு எவ்வித மனிதாபிமான நிவாரணப் பொருள்களும் விநியோகிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரு தரப்பினருக்கும் இடையிலான யுத்தம் உக்கிரமடைந்து வருவதால் அப்பிரதேசத்தில் சிக்கியுள்ள சிவிலியன்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

**செஞ்சிலுவை அலுவலகம் மீது வெள்ளியன்று தாக்குதல்**

இதேவேளை-கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# சைவர்களின் புனிதத் திருநாள் தைப்பூசம்

**இன்றைய தினம் இவ்வாண்டின் தைப்பூசத் திருநாளாகும்**

சைவத் தமிழ் மக்களின் இனிய திருநாள்களில் தைப்பூசம் மிகவும் சிறப்புப் பெற்றது. இந்து மக்கள் தமது இல்லங்கள், ஆலயங்கள் தோறும் இப்பூசநாளில் புனிதம் பேணுவர். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது எமது நம்பிக்கை. ஏனெனில் தை மாதம் உழவருக்குரிய மாதம். இந்த உழவரின் உழைப்பு பலன்பெறும் மாதம் என்றும் கூறலாம். உழுதவன் உண்டு களிப்புறும் மாதமாக அவனின் நெல் மணிகள் பூத்துக் குலுங்கிக் காய்த்துப் பழுத்து பதர் நீக்கி பக்குவப்படுத்தி வீட்டுக்குக் கொண்டு வந்து விழா எடுக்கும் நாளாகவும் இத்தைப் பூச நாள் விளங்குகிறது. பன்னிரு இராசிகளில் கர்க்கடக இராசியில் அங்கம் வகிக்கும் இப்பூச நட்சத்திரம் புராண இதிகாசங்களில் போற்றப்படுவதையும் நாம் காணலாம்.

இந்துக்கள் தைப்பூச நாளில் புதிர் எடுத்தல், புதிர் உண்ணல் என்ற நடைமுறைகளைப் பின்பற்றுவர். பழையன கழிதலும் புதியன புகுதலும் ஆகிய நிகழ்வுகள் நடை பெறும் நாளாகவும் இப்பூச நாள் விளங்கு கின்றது. உழவனின் வியர்வைத் துளிகள் நெல் மணிகளாக வெளிக் கொணர்ந்து அவன் வெற்றிக்களிப்புடன் வீட்டிற்கு ஒரு பிடி நெற்கதிரை அறுத்து வந்து சுவாமிக்குப் படைத்து விழா எடுப்பதும் இந்நாளிலேயாகும். அந்த நெல்லைக் கொண்டு அமுது படைத்து, ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து இன்புறும் நாளாகவும் இத்தைப்பூசநாள் விளங்குகிறது. கிழக்கு மாகாணத்திலும் பல கிராமங்களிலும் புதிது உண்ணல் என்று இத்தினம் அழைக்கப்படுகின்றது. சம்பந்தர் போன்ற நால்வர் பெரு மக்களால் பாடப்பட்ட புனிதநாள் இத் தைப் பூசநாள். 'தைப்பூசம் காணாத போதியோ பூம்பாவாய்' என்று திரு ஞான சம்பந்தர் பாடுவதிலிருந்து இத்தினத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளலாம்.

மகர மாதமாகிய தைமாதம் தமிழர்களுக்கு விசேட மாதமாக அமைவது போல் சிங்கள மக்களுக்கு புனிதமாகத் திகழ் கின்றது. புத்தபகவான் ஞானோதயம் பெற்று விளங்கியமையும் இந் நாளிலேயாகும். ஞானிகளின் கர்வத்தை அடியோடு அடக்கி ஞானம் கொடுத்ததும் இப்பூச நாளிலே ஆகும். தில்லை மூவாயிருவருக்கும் இரணியவர் மனுக்கும் தில்லையில் நடராசப் பெருமான் தரிசனம் கொடுத்ததும் தைப்பூசத் திருநாளிலாகும். சைவ மக்கள் தாம் வாழும் இடமெங்கும் இப்பூச நாளைப் பெருவிழாவாகக் கொண்டாடுவர்.

மகாவிஷ்ணு மோகினியாகவும், சிவபிரான் பிச்சாடனர் கோலமாகவும் தாருகா வனத்தின்கண் சென்று அங்குள்ள முனிவர்களின் கர்வத்தை அடக்க எடுத்த கூத்தை விஷ்ணு மூர்த்தி ஆதிசேடனுக்கு உரைத்தார். இதனைக் கேட்ட ஆதிசேட மூர்த்தி தானும் அக் கூத்தைக் காணவிரும்பி கயிலைக்குச் சென்று தவம் அனுஷ்டித்தார். இதே கூத்தைக் காணவிரும்பிய வியாக்கிரபாத முனிவரும் சிதம்பரத்தில் தவமிருந்தார். சிவபெருமான் ஆதிசேடன் முன் தோன்றி 'அப்பனே தில்லைக்கு வருவாயானால் நம் திருக்கூத்தை உனக்கும் வியாக்கிர பாதமுனிவருக்கும் ஆடிக்காட்டு வோம்' என்றுரைத்தார். இப்படியாக இருவருக்கும் நடனமாடிக் காட்டிய சிறப்பு வாய்ந்த நன் னாளே இத் தைப்பூசத்திருநாள். இதனாலேயே சிவனின் நடனக் கோலத்தை உணர்த்தவே ஆலயங்களில் பிச்சாடனார் உற்ச வம் நடைபெறுகிறது. சிவனின் இத் திருத்தாண்டவத்தால் வையகமே நடுங்கிற்று. இவ்வுலகம் முழுவதும் இந்நடனத்தால் அயர்ந்துள்ள மையை உணர்ந்து நடனத்தை நிறுத்த யாவரும் துதிசெய்து வணங்கி நின்றனர்.

இப்புனித தினத்தில் இந்துக்களா கிய நாம் ஆலயங்கள் தோறும், வீடுகள் தோறும் புனிதம் பேணி நடப்போமாக. தீபங்களை ஏற்றி உழவர் திருநாளாகவும், திருத்தாண்டவ நாளாகவும் சிவனை நினைத்து அபிஷேக ஆராத னைகள் செய்து போற்றுவோமாக. நாம் செய்த பாவ வினைகளை அகற்றி நல் வினை செய்துகொள்ள வழிசமைப்போமாக.

*அமரர் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.*

## சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 162 ஆவது ஆராதனை விழா

யாழ்ப்பாணம், பெப்.8

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 162 ஆவது ஆராதனை விழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் தலைமையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

## நாளை

| | |
|---|---|
| தை 27 | 09.02.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | பூரணை |
| | மு.இ. 09.16 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | பி.இ. 02.19 வரை |
| சுபநேரம்: | 12.34 - 02.04 |
| ராகுகாலம்: | 08.04 - 09.34 |

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி பதிவு செய்யக் கோரிக்கை

வலி.வடக்கு, பெப்.8

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள வலிகாமம் லீக்கில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் செயலாளர் பிரதீபனுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது.

(203-86)

# மக்கள் விரோதச் செயல்களைக் கண்டித்து புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஜோன்பிள்ளை

**பெப்8, 1889**

1889ஆம் ஆண்டு பெப்ரவரி எட்டாம் திகதி பத்திரிகையாளரும் ஆங்கில இலக்கிய வாதியுமான சொலமன் ஜோன்பிள்ளை காலமானார்.

**வேல்ஸ் இளவரசரை வரவேற்ற குழுவுக்குத் தலைமை வகித்தவர்**

1836ஆம் ஆண்டு பிறந்த இவர் உதய தாரகை "Literrary Mirror" பத்திரிகைகளில் பத்திரிகையாளராகப் பணியாற்றியுள்ளார். இவை யிரண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகள். இவற்றைவிட கொழும்பிலி ருந்து வெளிவந்த சிலோன் ஒப்சேவர் பத்திரிகையில் பத்தி எழுத்தாளராகவும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார். 1862ஆம் ஆண்டு வெளிவந்த Jaffna Freeman பத்திரிகையின் ஆசிரியபீடத்திலும் கடமையாற்றிய சொலமன் ஜோன்பிள்ளை மெதடிஸ்த மிஷனால் வெளியிடப்பட்ட Patriot பத்திரிகையின் ஆசிரியராக மெதடிஸ்த மிஷனால் நியமிக்கப்பட்டார். ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்ட சொலமன் ஜோன்பிள்ளை பத்திரிகையின் பெயரை Ceylon Patriot என மாற்றினார். தனது எழுத்துக்களில் மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து வந்தமையால் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார் சொலமன் ஜோன்பிள்ளை. யாழ்ப்பாணக் கச்சேரியில் பதிவாளராகக் கடமை யாற்றிய இவரை, 1875ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு விஜயம் செய்த போது அவரை வரவேற்பதற்குச் சென்ற தமிழ்ப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராக அப்போதைய அரசாங்க அதிபர் துவைனம் அனுப்பிவைத்தார்.

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

வரவேற்புக் குழுவினர் வரவேற்புரையைத் தயார் செய்யாதபடியால் வரவேற்புபசாரத் தைத் தள்ளிபோடுவோமா என யோசித்துக் கொண்டிருந்த போது அரை மணித்தியாலத்தில் தானே வரவேற்புரையைத் தயாரித்து வாசித்தார். இவரது நாட்டுப்பற்றும், ஆங்கிலப் புலமையும் வேல்ஸ் இளவரசருக்கு [illegible] பற்றிய தெளிவான விளக்கத்தை அளித்தது. எண்பதுகளின் பிற்பகுதி வரை யாழ்ப்பாணத்திலிருந்து ஆங் கிலப் பத்திரிகைகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

-தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி உறவுகளின் அவலத்தால்
# பாதிப்புற்றுள்ள யாழ்.மக்களின் துன்பத்தில் பங்குகொள்ள வந்துள்ளார் பாப்பரசரின் பிரதிநிதி

யாழ்ப்பாணம், பெப்.8

வன்னியில் உள்ள தமது உறவுகளின் அவலங்களால் துன்பப்படும் யாழ். குடா நாட்டு மக்களின் துயரங்களில் பங்கு கொள்வதற்காக, பாப்பரசரின் இலங்கைத் தூதுவர் மேதகு மரிய சொனாரி ஆண்டகை யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அவர், நேற்று மறைமாவட்ட ஆயர், குருக்கள் மார், துறவிகளுடன் சம கால நிகழ்வுகள் குறித்தும், வன்னி மக் களின் துயரங்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

வன்னியில் போரில் சிக்குண்டுள்ள மக்களின் அவலங்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கும் வகையில் விசேட திருப்பலியை இன்று காலை 7 மணிக்கு யாழ். மரியன்னை தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கவிருக் கிறார்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து கோப்பாய், குருநகர் ஆகிய பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்க ளில் தங்கியுள்ள மக்களை இன்று ஆண்டகை சந்தித்து நலன்களை விசாரிக்க உள்ளதாகவும் யாழ். ஆயரின் செயலாளர் எஸ்.ஏ.றொஷான் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த வாரம் ஆண்டகை கொழும்பில் ஜனாதிபதியையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் மற்றும் இராணுவத் தளபதியையும் சந்தித்து வன்னி மக்களின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார். அங்குள்ள மக்கள், குருக்கள், துறவிகள் ஆகியோர் அனுபவிக்கும் துன்பத்தை அவர்களிடம் எடுத்துக் கூறினார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கென அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் யுத்த சூனியப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட வேண்டும் என ஆண்டகை அந்தப் பேச்சுக்களில் வலியுறுத்தினார் என்று யாழ்.ஆயரின் செயலர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## புதுக்குடியிருப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படையின் ஊடக பேச்சாளர் விங் கமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் புலிகளின் தலைவர்கள் ஒன்று கூடும் இடத்தில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் கடற் புலிகளின் தளபதி சூசை கொல்லப்பட்டாரா என்பது குறித்து உறுதியாக கூற முடியாது என்றும் அங்கிருந்த இரண்டு சிரேஷ்ட தலைவர்கள் உட்பட பதினேழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். சூசை கொல்லப்பட்ட தாகவும், பின்னர் காணாமல் போனதாகவும் தகவல் கிடைத்தது. எனினும் அதனை உறுதி செய்ய முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(அ-சி)

## சேதமுற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனசமூகநிலையக் கட்டடத்துக்கும் அருகில் உள்ள பாடசாலைக்கும் மாற்றப் பட்டுள்ளது.

போதிய வசதிகள் இன்றி தரையில் படுக்கும் 400 நோயாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு அரச கட் டுப்பாட்டுப் பகுதிகளுக்கு எடுத்துவர பாதுகாப்பான பாதை ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு கேட்டுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்புப் படை யினருடனும் விடுதலைப்புலிகளுடனும் பேச்சு நடத்திவருகிறோம் என்று அந்தக் குழுவின் பேச்சாளர் சரசி விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

சனசமூக நிலையம் மற்றும் பாடசாலையில் இயங்கும் அந்த வைத்தியசாலையில் கூடுதல் நோயாளர் தங்கியுள்ளதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (அ-1)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அனைத்துக் கட்சிகளின் தெரிவுக்குழு செய்துள்ள சிபாரிசுகளில் மேற்கண்ட இரண்டும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் இந்தக்குழு கூடி இறுதிநகல் வரைவை தயாரித்துள்ளது. அந்த வரை விலேயே மேற்கண்ட இரண்டு சிபாரிசு களும் அடங்கி உள்ளதாக தெரிவுக்குழு வட்டாரங்கள் கூறின.

அரசாங்கம் அமைத்துள்ள அனைத்துக் கட்சித் தெரிவுக்குழு 104 ஆவது தடவையாக கூடி இறுதி நகல் வரைவை தயாரித்துள்ளதாக அறியப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக 95 வீதமான விடயங்களில் தெரிவுக்குழுவில் பங்குகொண்ட கட்சிகளிடையே இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த இறுதி நகல் வரைவு இந்த மாத இறுதியில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் படவிருக்கிறது. அதற்கு முன்னர் அந்த வரைவு சகல அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பப்படும் என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (அ-1)


Seminar-2
Mon. 8 - 1
போ. சமூ., வாசிக்க அடிப்படையில் இந்து மைபேடு இலவசம்
Only 150/=
சிங்களம்: பேராசிரியர் எஸ்.லீலாகிருஷ்ணன்
English V.S.Soory S.L.T.S
G.A.O. & Officers
11 - 1 Exam View
Arts Academy
நாவலர் வீதி AOA


## ஈழத்தமிழரைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணத்தின் விளிம்பில் துடிக்கின்ற நமது தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க ஒற்றுமையுடன் போராடுவோம், வீறுகொண்டு எழுவோம் என்று மாநிலம் முழுவதும் நடைபெற்ற கறுப்புக் கொடிப் பேரணியில் பங்கேற்ற பல லட்சம் தொண்டர்கள் முழக்கமிட்டனர்.

அரசியல், சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பால், தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஈழத் தமிழர்களின் துயர் துடைப்பதில் முன்நிற்போம் என்று பேர ணியில் பங்கேற்ற அனைவரும் சூளுரைத் துக் கொண்டனர்.

தலைநகர் சென்னையில் நேற்று மாலை நடைபெற்ற எழுச்சி மிகு கறுப்புக் கொடி பேரணியில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் மருத்துவர் இராமதாஸ், தா.பாண்டியன், வைகோ, தொல்.திரு மாவளவன், பழ.நெடுமாறன் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு கறுப்புக்கொடிகளை ஏந்தி முழக்கமிட்டுச் சென்றனர்.

மன்றோ சிலையில் இருந்து புறப்பட்ட இந்தக் கறுப்புக் கொடிப் பேரணியில் தலைவர்களைத் தொடர்ந்து அணிவகுத்து வந்த பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் முழக்கமிட்டு ஆர்ப்பரித்து சென்றனர்.

அண்ணாசாலை வழியாக சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகாமை யில் இப்பேரணி முடிவுற்றது. அங்கே தலைவர்கள் அனைவரும் உரையாற்றினர்.

### மாவட்டங்களிலும் பேரணிகள்

இதேபோன்று மதுரை, திருச்சி, சேலம், கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர் முதலிய மாநகராட்சி நகரங்களிலும், மாவட்டத் தலைநகரங் களிலும், பேரூர், சிற்றூர்களிலும் கறுப்புக் கொடிப் பேரணிகள் மிகவும் எழுச்சியாக நடைபெற்றன.

இந்த அமைப்பில் பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் முதலான அரசியல் கட்சிகள் இடம்பெற்ற போதிலும் நேற்றைய பேரணியில் இந்தக் கட்சிகளின் கொடிகள் எடுத்து வரப்படவில்லை. பேரணியில் பங்கேகற்ற அனைவரும் கையில் கறுப்புக்கொடிகளை மட்டுமே ஏந்தி வந்து பங்கேற்றனர்.(அ-1)

## மூன்று நாள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது-

இதில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் ஏராளமானோர் காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது. இத்தாக்குதலில் இராணுவத்தின் கனரக வாகனங்கள் சேதமடைந்ததாகவும் சிலவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகவும் புலிகள் ஆதரவு இணையத்தளங்களில் படங்களுடன் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனிடையே கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று இராணுவ வீரர்களின் குடும்பத்தினர் ஏராளமானோர்கூடி போரில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த வீரர்கள் குறித்த தகவலை தர வேண்டும் என்று முற்றுகையிட்டனர்.

இத்தாக்குதலில் உயிரிழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையை இலங்கை அரசு இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது - என்று 'தினமணி'ச் செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது. (அ)

## வன்னிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிறுவனத்தின் இலங்கை செயற்பாடுகளுக்கான துணை இயக்குநர் அஸோப் அஸ்ரத் மேற்கண்டவாறு கவலை தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களை வன்னிக்கு அனுப்புவதற்கான எல்லா ஆயத்தப் பணிகளையும் தாங்கள் செய்திருப்பதாகவும், ஆனால் பாதுகாப்பு சூழல் தொடர்பான அனுமதியை அதிகாரிகள் வழங்காததால் உணவுப் பொருள்களை அனுப்ப முடியாமல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக இலங்கை அரசின் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறும்போது,

வன்னிப்பகுதிகளில் அரசாங்க அதிபர்கள் இப்போது இல்லை. உலக உணவுதிட்டத்தினர் அரசாங்கட்டுப்பாட்டு பகுதிவரையிலுமே உணவினை கொண்டு செல்லத் தயாராக இருக்கின்றனர். ஆதலால் தற்போது உணவுப்பொருள்களை மேற்கொண்டு வன்னிப்பகுதிக்கு எடுத்துச் செல்வதில் அரசாங்கம் தற்போது ஓர் இக்கட்டான நிலையை எதிர்கொண்டிருக்கிறது, என்று தெரிவித்தார். (அ-1)

## போர் நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணெண்ணையை ஊற்றித்தீக் குளித்துள்ளார். படுகாயமடைந்த நிலையில் மயிலாடுதுறை அரச வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுப் பிற்பகல் மரணமானார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் மயிலாடுதுறை நீதிவானுக்கு வாக்குமூலம் அளித்தார்.

இரவு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன் அதில் ஈழத்தமிழர்களின் அவலங்களை பார்த்து நெஞ்சு பதைத்தேன். இத்தனை அவலங்களுக்கு உள்ளாகியிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு உதவ என் கட்சியினர் முன்வரவில்லையே என எனக்கு ஆத்திரமாக இருந்தது. இதனால் இந்த முடிவுக்கு வந்தேன்'' என்று ரவிச்சந்திரன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

தீக்குளிப்பதற்கு முன்னர் வீட்டில் உள்ள செய்தித்தாள் ஒன்றில் ஈழத்தமிழர் துயரம் தன்னை மிகவும் பாதித்ததாக எழுதி வைத் துள்ளார். அத்துடன் "தமிழீழம் வாழ்க, ராஜ பக்ஷ ஒழிக" என்ற வாசகங்களையும் எழுதி வைத்துள்ளார்.

ஈழத்தமிழருக்காக காங்கிரஸ் வட்டாரத் தலைவர் ஒருவர் தீக்குளித்திருப்பது தமிழகத்தில் பரப ரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

ஈழத்தமிழர்களின் அவலங்களைப் போக்குமாறு கோரி முத்துக்குமாரன், பன்னப்பிட்டி ரவி ஆகியோர் ஏற்க னவே தீக்குளித்து உயிர்தியாகம் செய்தது தெரிந்ததே. (அ-1)

# ஆஸ்பத்திரி மீது....

(முதலாம் பக்கத்த தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமையும் நேற்று சனிக் கிழமையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்கள்குறித்து இணைத்தளம் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:-

புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த "மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவ மனை'' மீது சிறிலங்கா வான்படையின் "மிக்'' ரக வானூர்திகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் அங்கு காயங்களுக்காக சிகிச்சை பெற்று வந்த 61 பேர் கோரப் பலியுண்டனர்.

வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சிறிலங்கா விமானப் படை ஆஸ் பத்திரியை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதலை நடத்தியது.

அதன்போது, அங்கு காயங்களுக்கு சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் 61 பேர் பலியாகினர்.

இத்தாக்குதலின் போது வீதியால் சென்று கொண்டிருந்த 12 பேர் காயம டைந்துள்ளனர்.

இந்த மருத்துவமனை வளாகத்தின் மீது நடைபெற்ற விமானத் தாக்குதலின் தொடர்ச்சியாக சிறிலங்கா படையினர் தொடர்ந்து ஷெல் தாக்குதலை நடத்திக் கொண்டிருப் பதால் மீட்புப் பணிகளை சரிவரச் செய்ய முடியாது இருக்கின்றது.படையினர் தற்போது ஆட்லெறி பீரங்கிகள் மூலம் கொத் துக்குண்டுத் தாக்குதல்களை நடத்தி வரு கின்றனர்.

ஆட்லெறி பீரங்கியின் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்ற போது - அவற்றுக்குள்ளிருந்து சிறிய குண்டுகள் 50 மீற்றருக்கும் கூடுதலான விட்டப் பகுதிக்கு பறந்து சென்று குறித்த நேரத்தில் வெடித்து பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்றன.

### தேவிபுரம்

தேவிபுரம் பகுதியில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீதும், மக்கள் குடியிருப்புக்கள் மீதும் நேற்று ஷெல்களும், குண்டுகளும் வீழ்ந்து வெடித்தன. 2 மணி நேரமாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குலில் 21 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 52 பேர் காயமடைந்துள்ளனர்.

தேவிபுரம் - புதுக்குடியிருப்பு வீதியில், சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்த போது - நேற்று நண்பகல் 12 மணியளவில் வான் படையின்'விமானங்கள் மூலம் குண்டுத் தாக்குதல் கள் நடத்தப்பட்டன.

இதில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 48 பேர் காயமடைந்துள்ளனர். மக்கள் பயணித்துக்கொண்டிருந்த 6 சைக்கிளில்கள் 4 மோட்டார் சைக்கிளில்கள் சிதைந்து சிதறிக்கிடக்கின்றன.

அப்பகுதி மீது தொடர்ந்து ஷெல்கள் வந்து விழுவதால் படுகாயமடைந்த மக்களை உடனடியாக மீட்டு சிகிச்சை வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே பகுதி மீது மீண்டும் பிற்பகல் 3:20 மணியளவில் ஷெல் செறிவான நடத் தப்பட்டதில் மேலும் 13 பேர் உயிரிழந் தனர்; 32 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை தேவிபுரம் மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் 17 ஆல் உயர்ந்துள்ளதுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் 54 ஆல் உயர்ந்துள்ளது. கொல்லப்பட்ட வர்களின் சடலங்கள் வைத்தியாசாலைக்கு எத்துவரப் பட்டுள்ளன. காயமடைந்தவர்களும் மருத்துவமனைக்கு கொண்டுவரப் பட்டுள்ளனர்.

அதேவேளை, முல்லைத்தீவு - இரணைப்பாலை, ஆனந்தபுரம், கைவேலி ஆகிய பகுதிகளில் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் 18 பேர் காயமடைந்துள்ளனர். (அ)


கார் விற்பனைக்கு
300-XXXX Nissan Sunny Car
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு 0777286003

வந்துவிட்டது வெற்றித்தேர்வு
ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளரும், பிரதமபரீட்சகருமான
திருமலை கணேசலிங்கம் அவர்களின்
2008 சாதனை படைத்த வெற்றித்தேர்வு
2009- தரம்: 5 வெற்றித்தேர்வு 1, 2
2009- தரம்: 4 வெற்றித்தேர்வு 1
2009- தரம்: 3 வெற்றித்தேர்வு 1
பாடசாலையில் பரீட்சை எழுதமுடியாத தரம்:5 மாணவர்களுக்கு விசேட ஏற்பாடாக ஒவ்வொரு ஞாயிறுமாக மொத்தம் 37 பரீட்சைகள் ஞாயிறு தோறும் திருத்திக் கொடுக்கப்படும். புள்ளிகள் வெளியிடப்படும் இறுதிப் பரீட்சையில் சித்திபெறத் தவறினால் முழுக் கட்டணமும் மீளளிக்கப்படும்.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி.
அனைத்து புத்தகசாலைகளிலும் பதிவு செய்யாமலே பெறலாம். வெற்றித்தேர்வு என்று கேளுங்கள்.
விரிவான விபரங்களுக்கு : 0773126807, 0212229016

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2010 A/L
வெப்ப இரசாயனம்
ஆரம்பம் - 08.02.2009 Sat., Sun. - 12.30 - 2 p.m.
BY: RAJAH

1 ஆம் ஆண்டின் நிறைவில்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றன.
விபரம் நாளைய உதயனின் 6 ஆம் பக்கத்தில்

வெளிவந்து விட்டது
தரம் - 5 2009 புலமைப் பரீட்சை புத்தகம்
ஆக்கம் - பிரபல ஆசிரியர்
வே.அன்பழகன்
அன்னை புத்தகசாலை,
இல.7, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

SUBRA(14) SUBRA(14)
GEOGRAPHY A/L DAY
Mon., Fri. - 6.30 - 8 மணி
Mon.அலகு ரீதியான பரீட்சை.
Tue.செய்முறை புவியியல்
Wed.சுற்றாடல் புவியியல்
Thu.மானிடப் புவியியல்
Fri.- Pass Paper Class
ஆரம்பம் - 10.02.2009 6.30 மணி
A/L Day கலை, வர்த்த, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் வார நாள்களில் காலை 6.30 - 11.30 வரை எமது வழமையான ஆசிரிய குழுவின் போதனைகள்.

ENGLISH PERSONAL CLASSES
பிரத்தியேக வகுப்புகள்
அனுபவமிக்க ஆசிரியரால் உங்கள் வீட்டில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு 0776589443
யாழ்ப்பாணம்.

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்
சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக்கொடுக்கப்படும்.
உ+ம் MD 90 செட்டை, Lancer செட்டை, China பிளாஸ்ரிக், Indian பிளாஸ்ரிக்.
இல.6, கனகசபை லேன், கே.கே.எஸ். றோட், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை.
தொ.பே.: 021 222 8680


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.